மலர் எண் 10

உ

திருச்சிற்றம்பலம்

தென்னாடுடைய
சிவனே போற்றி!



எந்நாட்டவர்க்கும்
இறைவா போற்றி!

மெய்கண்ட நூல்

கொற்றவன்குடி-உமாபதி சிவம்

அருளிய

சிவப்பிரகாசம்

(பொழிப்புடன்)

2006

வெளியிடுவோர் :

அருள்தரும் மாணிக்க வாசகர் மன்றம்
இராமாபுரம், காவேரிப்பாக்கம் அஞ்சல்,
வேலூர் மாவட்டம் - 632 508.

உ

அண்ணாமலையானை பாடுதும்!

சித்தத்தைச் சிவன் பாலே வைத்த சீரடியார்

தவத்திரு. பொன்னுசாமி அடிகளார்

எப்பொழுதும் நினைவுகூறும்
திருவாசகப் பாடல்கள்

தனித்துணை நீ நிற்க, யான் தருக்கி, தலையால் நடந்த
வினைத் துணையேனை விடுதி கண்டாய்? வினையேனுடைய
மனைத்துணையே! என்தன் வாழ்முதலே! எனக்கு எய்ப்பில் - வைப்பே!
தினைத்துணையேனும் பொறேன், துயர் ஆக்கையின் திண்வலையே!

வினைப்பிறவி என்கிற வேதனையில் அகப்பட்டு
தனைச் சிறிதும் நினையாதே, தளர்வு எய்திக் கிடப்பேனை
எனைப் பெரிதும் ஆட்கொண்டு என் பிறப்பு அறுத்த இணை இலியை
அனைத்து உலகும் தொழும் தில்லை அம்பலத்தே கண்டேனே!

"மருவி எப்பொருளும் வளர்ப்போன் காண்க!"

உ

அண்ணாமலையானை பாடுதும்!

சித்தத்தைச் சிவன் பாலே வைத்த சீரடியார்

தவத்திரு. **பொன்னுசாமி அடிகளார்** அவர்களின்

பதினைந்தாம் ஆராதனைத் திருநாள் திருமலர்

சிவப்பிரகாசம்

பார்த்திப ஆண்டு, தைத் திங்கள் 26ம் நாள், புதன்கிழமை,

மிருகசீரிடம் - கண்ணப்பர் திருநாள் (8.2.2006)

இம்மலரினை வெளியிட்டு வாழ்த்துரை வழங்கியவர்

ஞானத் தந்தையார்

சிவத்திரு. ஆர். முத்து குமாரசாமி, B.Sc., B.L., அவர்கள்

நிர்வாகத் தலைமை, மகான் சேஷாத்திரி சுவாமிகள் ஆசிரமம், திருவண்ணாமலை.

வெளியிட்டோர் : **அருள்தரும் மாணிக்க வாசகர் மன்றம்**

இராமாபுரம், காவேரிப்பாக்கம் அஞ்சல், வேலூர் மாவட்டம் - 632 508.

பொருளடக்கம்

I. பொது அதிகாரம்

	செய்யுள்	பக்கம்
1. பாயிரம்	1–12	
2. பதி இலக்கணம்	13–18	27–30,24,25
3. பசு இலக்கணம்	19	30
4. பாச இலக்கணம்	20–32	31–38
5. அவத்தை இலக்கணம்	33–50	39–49
II. உண்மை அதிகாரம்	51	51
1. ஆன்ம இலக்கணம்	52–59	50–52
2. ஐந்து அவத்தை இலக்கணம்	60–62	52–53
3. உணர்த்தும் தன்மை	63–67	53,54
4. ஞான வாய்மை	68–70	55
5. ஞானப் பயன்	71–89	56–61
6. புனிதன் நாமம்	90–92	61
7. அணைந்தோர் தன்மை	93–98	62,63
8. நூல் கருத்து	99	64
9. நூல் உபதேசிக்கும் முறை	100	65



உ

அண்ணாமலையானைப் பாடுதும் !

திருவருணை பால் சுவாமிகள்

தெய்வத்திரு.
பொண்ணுசாமி அடிகளார்

மெய்கண்ட தேவர் அருளிய முதல் நூல்
சிவ ஞான போத நோக்கில் – சிவப்பிரகாசம்

நூற்பா	செய்யுள்	பக்கம்
(பொது அதிகாரம்)		
முதல் நூற்பா	10	27–30,24,25
இரண்டாம் நூற்பா	32	30–48
(உண்மை அதிகாரம்)		
மூன்றாம் நூற்பா	9	49–52
நான்காம் நூற்பா	3	52,53
ஐந்தாம் நூற்பா	5	53,54
ஆறாம் நூற்பா	1	55
ஏழாம் நூற்பா	2	55
எட்டாம் நூற்பா	5	56,57
ஒன்பதாம் நூற்பா	4	57,58
பத்தாம் நூற்பா	13	59–62
பதினொன்றாம் நூற்பா	5	62–64
பன்னிரண்டாம் நூற்பா	3	64,65

உ

முதல் நூல்

மெய்கண்ட தேவர் அருளிய

சிவ ஞான போதம்

மங்கல வாழ்த்து

கல்லால் நிழல்மலை
வில்லார் அருளிய
பொல்லார் இணைமலர்
நல்லார் புனைவரே.

அவையடக்கம்

தம்மை உணர்ந்து
தமை உடைய தன் உணர்வார்
எம்மை உடைமை
எமை இகழார் - தம்மை
உணரார் உணரார்
உடங்கியைந்து தம்மில்
புணராமை கேளாம் புறன்.

முதல் நூற்பா - கடவுளும் உலகமும்

(பதி உண்மை)

அவன் அவள் அது எனும் அவை, மூவினைமையின்
தோற்றிய திதியே ஒடுங்கி மலத்து உளதாம்
அந்தம் ஆதி என்மனார் புலவர்.

இரண்டாம் நூற்பா - கடவுளும் உயிர்களும்

(பாச உண்மை)

அவையே தானே ஆய், இரு வினையின்
போக்குவரவு புரிய, ஆணையின்
நீக்கம் இன்றி நிற்கும் அன்றே

மூன்றாம் நூற்பா - உயிரும் உடம்பும்

(பசு உண்மை)

உளது, இலது என்றலின், எனது உடல் என்றலின்
ஐம்புல் ஒடுக்கம் அறிதலின் கண்படின்
உண்டிவினை இன்மையின் உணர்த்த உணர்தலின்
மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா

நான்காம் நூற்பா - உயிரும் உட்கருவிகளும்

(உயிர் இயல்பு)

அந்தக் கரணம் அவற்றின் ஒன்று அன்று,
அவை சந்தித்தது, ஆன்மா, சகச மலத்து உணராது
அமைச்சு அரசு ஏய்ப்பநின்று அஞ்சு அவத் தைத்தே.

ஐந்தாம் நூற்பா - திருவருள் முன்னிலை

(பாச இயல்பு)

விளம்பிய உள்ளத்து மெய்வாய் கண்முக்கு
அளந்து அறிந்து அறியா, ஆங்கு அவை போலத்
தாம்தம் உணர்வின் தமி அருள்,
காந்தம் கண்ட பசாசத் தவையே.

ஆறாம் நூற்பா - சிவ சத்து

(பதி இயல்பு)

உணர் உரு அசத்து எனின் உணராது இன்மையின்
இருதிறன் அல்லது சிவசத் தாம் என
இரண்டு வகையின் இசைக்குமன் உலகே

ஏழாம் நூற்பா - இரண்டலா ஆன்மா

(ஆன்மா அறியும் முறைமை)

யாவையும் சூனியம் சத்துஎதிர் ஆகலின்
சத்தே அறியாது அசத்து இலது அறியாது
இருதிறன் அறிவுளது இரண்டலா ஆன்மா

எட்டாம் நூற்பா- குருவுமாய் உணர்த்தல்

(பக்குவ ஆன்மா ஞானம் உணரும் முறைமை)

ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்துஎனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்த,விட்டு
அன்னியம் இன்மையின் அரன்கழல் செலுமே.

ஒன்பதாம் நூற்பா - சிந்தையுள் நாடுதல்

(உயிர் பதிஞானம் பெறும் முறைமை)

ஊனக் கண் பாசம் உணராப் பதியை
ஞானக் கண்ணில் சிந்தை நாடி
உராத்துனைத் தேர்த்து எனப் பாசம் ஒருவத்
தண்ணிழலாம் பதி, விதி எண்ணும் அஞ்செழுத்தே.

பத்தாம் நூற்பா - இறைபணி நிற்றல்
(பாச நீக்கம்)

அவனே தானே ஆகிய அந்நெறி
ஏகன் ஆகி இறைபணி நிற்க
மலம் மாயை தன்னொடு வல்வினை இன்றே.

பதினோறாம் நூற்பா - அயரா அன்பு
(சிவப்பேறு)

காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போல்
காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்
அயரா அன்பின் அரன்கழல் செலுமே.

பன்னிரண்டாம் நூற்பா - அன்பரொடு மருவுக
(ஞானியர் இயல்பு)

செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா
அம்மலம் கழீஇ அன்பரொடு மரீஇ
மால் அற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரன் எனத் தொழுமே.

பதிப்புரை

''மெய்கண்ட சாத்திர'' நூல்கள் பதினான்கில் உமாபதி சிவாச்சாரியாரால் பாடப் பெற்றவை எட்டு நூல்கள். அவற்றுள் ஒன்று 'சிவப்பிரகாச' நூல். இதற்கு முதல் நூல் சிவஞானபோதம் வழி நூல் சிவஞான சித்தியார்; சிவப்பிரகாசம் சார்பு நூல் ஆகும். ''சித்தாந்த சாத்திரங்களுள் இந்நூல் மிகச் சிறந்தது. இதன் செய்யுள் நடை மிக எளியது. முதல் நூல் வழிநூல்களில் கூறப்பட்ட விஷயங்களைச் சுருங்கச் சொல்லி விளங்க வைப்பது. பாசப்பற்று நீங்க ஞானம் பெற்றுத் திருவடியை அடையும் முறையைத் தெளிவாய்க் காட்டுவது'' என்று உரையாசிரியர் மு. திருவிளங்கம் கூறுவது மிகவும் பொருந்தும்.

இந்நூல் இருபெரும் அதிகாரங்களைக் கொண்டது. ஒவ்வோர் அதிகாரத்துக்கும் பிரிவுகள் சில உள்ளன. அவற்றைப் பொருளடக்கத்தில் காணலாம். இப்பிரிவுகளில் நூறு பாடல்கள் விளக்கம் பெறுகின்றன. சிந்தைக்கு இனிய செவிநுகர் கனிகளாக இப்பாடல்கள் விளங்குகின்றன. சைவர் ஒவ்வொருவர் இல்லத்திலும் இருக்க வேண்டிய நூல் இச்சிவப்பிரகாசம் ஆகும். கடவுள், உயிர், உலகம் என்னும் முப்பெரும் உண்மைகளைத் தெளிவாக உலகியல் அனுபவத்தோடு இப்பாடல்கள் வெளிப்படுத்துகின்றன. இவற்றைப் பன்முறை படித்து சுவைக்க வேண்டும். அதற்கேற்ப திருவாசகச் செல்வர், முத்து விழாக் கண்ட பெரியார் சிவத்திரு. இரா.கி. சச்சிதானந்தம் அவர்கள், வழக்கம்போல் இந்த ஆண்டும் தம் குருநாதர் தவத்திரு. பொன்னுசாமி அடிகளார் குருபூசையில் - அருள்திரு உண்ணாமலை அம்மன் உடனுறை அண்ணாமலையார் திருக்கோயிலில் 08.02.2006-ல் இந்த நூலை வெளியிடுகின்றார். சைவத் திருத்தொண்டர் தெய்வத்திரு கி. நாராயணசாமி நாயுடு

அவர்களுடைய சிவப்பிரகாச மூலம் மேலும் சொல் பிரித்து இங்கே தரப்பட்டுள்ளது. சைவர் ஒவ்வொரு வரும் இதன் பொருளை அறிந்து கொள்ள வேண்டும் என்று இலங்கை கொழும்பு அறிஞர் மு. திருவிளங்கம் அவர்களின் சிவப்பிரகாசப் பொழிப்புரையை இங்கு தனியே கொடுக்கப்பட்டுள்ளது. "சிவப்பிரகாச பொழிப்புகளை ஒன்றுபடுத்திச் சேர்த்தால், வேதாந்தத் தெளிவைத் தெரிவிப்பதோடு சைவ சித்தாந்த வசனாமிர்த நூலொன்று சித்திக்கும் என்று அறிஞர் பண்டித மணி சி. கணபதிப்பிள்ளை கூறிய பொன்னான கருத்துகள் இன்று நிறைவேறியுள்ளது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும். இவ்விரு நூல்களை வெளியிட்ட இரு பெரும் அறிஞர்களுக்கு அருள்தரும் மாணிக்க வாசக மன்றச் சார்பில் இதயம் கனிந்த நன்றியினைத் தெரிவிக்கின்றேன்.

இந்நூலை, 5 ஆண்டுகளுக்கு முன்பு திருவிளங்கனார் பொழிப்புரையோடு தனியே எழுதி வைத்தேன். பின்னால் நூலாக வெளியிட எண்ணி, அந்த முயற்சி - எண்ணம் இப்போது திருவாசகத் தொண்டர் இரா.கி. சச்சிதானந்தம் அவர்கள் வழி வெளிவருவது மிகுந்த மகிழ்ச்சியையும் மனநிறைவையும் தருகிறது. தமிழர், தம் தனிப் பெரும் சொத்தில் ஒரு பகுதியாம் 'சிவப்பிரகாசத்தை'ப் படித்துப் பயன் பெற வேண்டுகிறேன்.

இந்நூலை நூலாக்கும் வேட்கையில் அரும்பாடுபட்டுழைத்த ஒளி அச்சுக் கோத்த திருமதி. மஞ்சு எட்வின் - எட்வின் அவர்கட்கும், அச்சிட்ட திரு. மயூரப்பிரியா அவர்கட்கும் விழாவில் பங்கேற்று சிறப்பித்த அன்பர்கட்கும் என் நன்றி என்றும் உரியன.

அ. நாகலிங்கம்

திருவண்ணாமலை
08.02.2006

முகவுரை

சீவன் முத்தன் ஆக்கும் சிவப்பிரகாசம் !

மேன்மை கொள் சைவ சமயத்தின் இரு கண்கள் பன்னிரு திருமுறைகளும் பதினான்கு மெய்கண்ட சாத்திர நூல்களும் ஆகும். பன்னிரு திருமுறைகளாம் தோத்திர நூல்களின் மெய்ப்பொளை இனிதே உணர்ந்து கொள்வதற்கு பின் வந்த சாத்திர நூல்கள் துணையாகும் என்பர். மெய்கண்ட நூல்களுள் சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றி பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சு விடு தூது, உண்மை நெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம் ஆகிய எட்டும் சித்தாந்த அட்டகம் எனப் போற்றுவர். சிவப்பிரகாசம் இவற்றின் மணி முடியாய்த் திகழ்வது நூறு விருத்தங்களை எளிய இனிய நடையில் கொண்டு இலங்குவது.

கொற்றவன் குடி உமாபதி சிவாச்சாரியார் இவற்றின் ஆசிரியர். புனிதமெனும் அத்துவிதம் கண்ட மெய்கண்ட தேவர் சைவ சமயச் சந்தான குரவர் நால்வருள் முதலில் வைத்து எண்ணப் பெறுபவர். மெய்கண்டார் சிவஞான போதம் அருளினார். அவர் தலைமை மாணவர் அருள் நந்திசிவனார்

சிவஞான சித்தியாரை அதன் விரிநூலாக இயற்றினார். இரண்டினையும் உளங்கொண்டு திருவருளால் உமாபதி சிவனார் சிவப்பிரகாசம் அருளிச் செய்தார். இது வழி நூல், சார்பு நூல் ஆயிற்று. இவர் சந்தான பரம்பரையில் நான்காமவர். சாத்திர நூல்கள் அன்றி திருத்தொண்டர் புராணசாரம், திருமுறை கண்டபுராணம், சேக்கிழார் புராணம், திருப்பதிகக் கோவை ஆகிய தோத்திர நூல்களும் இயற்றினார். இதுவுமன்றி ஆகமப் பொருளை வடமொழியிலும் வரைந்துள்ளார். தில்லை வாழ் அந்தணர் மரபில் தோன்றிய இத் திருவினர்க்கு அம்பலவனை நாளும் திருமேனி தீண்டும் புனிதப் பேறும் அடித்தொண்டாக அமைந்தது. ஒரு சமயம் "பட்டகட்டையில் பகல் குருடு போகுது பாரீர்!" என்னும் மறைஞான சம்பந்தரின் குருவருள் இவரை ஈர்த்து ஆட்கொண்டதால் மறைஞான சம்பந்தரின் தலைமை மாணவராகி குருவருள் நிரம்பப் பெற்றார்.

சிவப்பிரகாசம் சைவத் திறனாம் மாறா உண்மைக் கொள்கைகளை உணர்ந்து கொள்வதற்கு அரியதோர்க் கைவிளக்காக அமைந்துள்ளது. நீண்ட நெடுங்காலமாக உயிர்களைக் கட்டிப் போட்டுள்ள மும்மை மலப்பாச தலையை தகரித்தெறிய ஞானம் ஒன்றே உதவும். அதனைப் பெறும் முறையினைத் தெளிவாக அறிவுறுத்துதல் பற்றி சிவப்பிரகாசம் சிவன் முத்தனாக்கும் என விதந்தோதிணர் மீளாப் பிறவில் பெருநோய் அகன்று உயிர்கள் பரமுத்தியாம், சித்தாந்த முத்தி, சிவப்பேற்றின் எய்தும் வகையினைப்

பலரும் (புறச் சமயத்தார்) பலவாறாக மாறுபட உரைத்தலை (முத்தி பேதங்களை) எடுத்துக்காட்டி, அங்ஙனம் கூறப்பெற்ற பழி சேர் முத்தியின் வேறுபட்ட பரமுத்தியின் மேன்மையினை உணர்த்தியது படிப்போர் உள்ளம் திருவருளில் படிவோர் உள்ளமாகும் என்பதில் ஐயம் உண்டோ?

இனி சிவ பரம்பொருளின் கைச் சீட்டு, பரிந்துரைக் கடிதம் பெற்றவர் இருவர். முன்னவர் கழறிற்று அறிவாராம் சேரமான் பெருமாள் நாயனார். தம்பிரான் தோழர் சுந்தரரின் அணுக்கத் தோழர்; சுந்தரருடன் கயிலை சென்று சிவபெருமான் திருமுன்னர் ''திருக்கயிலாய ஞான உலா'' பாடி அங்கே அரங்கேற்றமும் செய்யும் பேறு மிகப் பெற்றவர். பாணபத்திரர் பொருள்பெறும் பொருட்டு ஆலவாய் அண்ணல் எழுதிய திருமுகப்பாசுரம் 11ஆம் திருமுறையின் முகப்பிலேயே, கடிதம் எழுதும் பாங்கினையும் உணர்த்துமாகோல் நாயனாரின் பேரன்பும், பெருங்கொடை மடமும் புலப்படுத்துவதாகவும் அமைந்த அருமை என்னோ! இது தோத்திர பகுதிக்கு ஆயிற்று.

சாத்திரப் பகுதிக்கோர் கைச்சீட்டு. கொற்றவன் குடியாருக்கு திருச்சிற்றம்பலவன் சாம்பான் வழி வழங்கியது ஆகும். உமாபதியார் திருமடைப் பள்ளிக்கு நாளும் விறகு வெட்டிக் கொணர்ந்து இன்பமார்ந்த ''பெற்றான் சாம்பானுக்கு முத்தி கொடுக்க முறை'' என்று ஒரு சீரடியாரைக்

கொண்டு பரிபாகமுற்ற ஆருயிரிக்கு வீடுபேறளிக்கும் புதுமையினைப் புகுத்தினார்.

உமாபதியாரும் அம்பலவன் ஆணை வழி சாம்பான், பெற்றான் சாம்பானாகும் வண்ணம் திருநோக்கால் அடிச் சேர வைத்தார். அக்கால அரசன் வேண்டுகோளையும் ஏற்று அந்த நாளிலேயே பக்குவமுற்ற முள்ளிச் செடிக்கும் வீடுபேறு அருளினார் என்பர். மற்றும் தில்லைப் பெருவிழாவில் கொடி ஏறாதபோது உமாபதியார் வந்து கொடிகவி ஐந்து பாடல்களை பாடி தானே கொடியேறுமாறு செய்தருளினார். தில்லை மன்றுள் நாளும் திருமுழுக்காடும் சோதிப்பிரான் (சிவலிங்கம்) கொற்றவன் குடியார் பூசைப் பெட்டிக்குள் ஒடுக்கம் கண்டருளிய அற்புதம் சொல்லொணாது.

சிவ ஞான போதத்திற்குச் சார்பு நூல் போல் திருவருட் பயன் என்னும் மற்றொரு நூலும் உமாபதியார் அருட்கொடை சித்தாந்த வித்துப்போல் உதவும் இத்திருவருட்குறள் மணிகள் நூறினையும் நம் குழந்தைச் செல்வங்கள் மனப்பாடம் செய்ய வைத்தல் வாழ்வு சிறக்கும், இன்பம் பெருகும்.

வீடு காதலிப்போர் இவ்வரிய ஞானக் கருவூலத் திறனை ஏற்றுப் போற்றிப் பயன் காண்பாராக.

அருள்மிகு உமாபதி சிவனார் பூங்கழல் போற்றி!!

அணிந்துரை

மகாவித்துவான் திரு. மா. அமிர்தலிங்கனார் அவர்கள், காஞ்சிபுரம்

சைவ சித்தாந்த சாத்திரமாகிய பெருங்கடலுக்கு ஒரு மரக்கலம் போன்றது 'சிவப்பிரகாசம்'. நம் உள்ளத்தில் சிவம் பிரகாசிக்கச் செய்வது அது. முப்பொருள் இயல்புகளைத் தொகுத்துரைக்கும் பாங்கு தனிச்சிறப்புடையது. கடவுள் இயல்பு முழுவதும் ஓரிடத்தில் ஒருங்கு காண்பதற்குரிய பாடல் வேண்டுமென்றபோது மகாவித்துவான் சி. அருணை வடிவேலு முதலியார் அவர்கள் சிவப்பிரகாசப் பாடலையே (13) சுட்டிக் காட்டினார்கள்.

ஆணவ மலம் அநேக சத்தியுடையது என்பது சித்தியார்; 'தம் கால எல்லைகளின் மீளும் எண்ணரிய சத்தியது' என்பது சிவப்பிரகாசம் தரும் அஃகி அகன்றதோர் விளக்கம். இருவினை ஒப்பு என்பது பற்றி வேறு வேறு கருத்துகள் வழங்கி வந்த நிலையில் முன்வினையும் மூள் வினையும் நேராக நேராதல் என்ற கருத்துக்கும் சிவப்பிரகாசம் இடம் தருகின்றது.

'தசகாரிய'த்துக்குத் தோற்றுவாய் செய்வதும் சிவப்பிரகாசமே. 'ஐந்தெழுத்து' விளக்கம் திருமந்திரத்திலும் உண்மை விளக்கத்திலும் அரும்பி, சிவப்பிரகாசத்தில் போதாகித் திருவருட் பயனில் மலர்கின்றது எனலாம்.

நாசோற் பத்தி பண்ணி வருதலை 'அகலாமுனம் மருவும்' என்று தமிழால் கூறும் தகவும் சிவப்பிரகாசத்தின் தனிச்சிறப்பே!

இவையனைய பல சிறப்புகளை உடைய இச்செழும் பொருள் நூலைக் கைக்கு அணிகலமாக கையடக்கப் பதிப்பாக மீண்டும் கிடைக்கச் செய்பவர்கள், அன்பின் பிழம்பாய்த் திகழும் ஆயிரம் பிறைகண்ட பெரியவர் இரா.கி. சச்சிதானந்தம் அவர்கள், அவர்கள் பெரிய புராணத் திருத்தொண்டர்களைப் போல் உறைப்புடையத் திருத்தொண்டர்.

அவர்களுடைய திருத்தொண்டு வழிவழியும் வளர்ந்து, சிறந்து வெல்க! அவர்களின் சிவஞானப் பெருஞ்சுற்றம் மகிழ்ந்தினிது வாழ்க! எனத் தன்னடைந்தார்க்கு இன்பங்கள் தருகின்ற தத்துவனைச் சிந்தித்து வாழ்த்தி வணங்குகின்றேன்.

மால் விடை ஊர்தி போற்றி!!

சிவப்பிரகாசம்

(கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியர் அருளிச் செய்தது)

காப்பு

ஒளியான திருமேனி, உமிழ் தானம், மிக மேவு
களி, ஆர வரும் ஆனை, கழல் நாளும் மறவாமல்,
அளி ஆளும் மலர் தூவும் அடியார்கள் உளமான
வெளி ஆகும்; வலிதாய வினை கூட நினையாவே.

I. பொது அதிகாரம்

1. பாயிரம்

ஓங்கு ஒளியாய், அருள் ஞான மூர்த்தி ஆகி,
உலகம் எலாம் அளித்தருளும் உமையம்மை காண

தேம் கமழும் மலர் இதழி, திங்கள், கங்கை,
திகழ் அரவம், வளர் சடைமேல் சேர வைத்து,
நீங்கல் அரும் பவத் தொடர்ச்சி நீங்க மன்றுள்
நின்று, இமையோர் துதி செய்ய, - நிருத்தம் செய்யும்
பூங்கமல மலர்த்தாள்கள், சிரத்தின் மேலும்
புந்தியிலும் உற வணங்கிப், போற்றல் செய்வாம். 1

பரந்த பராபரை, ஆதி பரனது இச்சை,
பர ஞானம், கிரியை, பர போக ரூபம்
தரும் கருணை உரு ஆகி - விசுத்த அசுத்தத்
தனு கரண புவன போகங்கள் தாங்க
விரிந்த உபாதானங்கள் மேவி - ஒன்றாய்,
விமலமாய், ஐந்தொழிற்கும் வித்தாய், ஞாலத்து
அரந்தை கெட - மணி மன்றுள் ஆடல் காணும்
அன்னை அருள் பாத மலர் சென்னி வைப்பாம். 2

நலம் தரல் நூல், இரும் தமிழின் செய்யுள் - குற்றம்
நண்ணாமை, இடையூறு நலியாமை, கருதி -
இலங்கும் இரு குழை அருகு பொருது, வரி சிதறி,
இணை வேல்கள் இகழ்ந்த கயல் - கண்ணியொடும், இறைவன்
கலந்து அருள - வரும் ஆனை முகத்தான், மும்மைக்
கடம் அருவி என நிலவு கணபதியின் - அருளால்
அலர்ந்து, மதுகரம் - முனிவர் பரவ, வளர் கமலம்
அனைய - திருவடி இணைகள் நினைதல் செய்வாம். 3

வளம் நிலவு குல அமரர் அதிபதியாய், நீல
மயில் ஏறி வரும், ஈசன் அருள் ஞான மதலை -
அளவு இல் பல கலை அங்கம் ஆரணங்கள் உணர்ந்த
அகத்தியனுக்கு ஓத்து உரைக்கும் அண்ணல் - விறல் எண்ணா.
உளம் மருவு சூரன் உரம், எனது இடும்பை, ஓங்கல்,
ஒன்று இரண்டு கூறுபட ஒளி திகழ் வேல் உகந்த,

களபம் மலி குறமகள்தன் மணி முலைகள் கலந்த,
கந்தன் - மலர் அடி இணைகள் சிந்தை செய்வாம். 4

தேவர் பிரான் வளர் கயிலைக் காவல் பூண்ட
திரு நந்தி, அவர் கணத்து ஓர் செல்வர், பாரில்
பரவிய சத்திய ஞான தரிசனிகள், அடி சேர்
பரஞ்சோதி மாமுனிகள், பதியா வெண்ணெய்
மேவிய சீர் மெய்கண்ட திறலார், மாறா
விரவு புகழ் அருணந்தி, விறல் ஆர் செல்வத்
தாவு இல் அருள் மறைஞான சம்பந்தர்,* இவர் இச்
சந்தானத்து எமை ஆளும் தன்மையோரே. 5

பார் திகழ, வளர் சாம வேதம் மல்க,
பராசர மா முனி மரபு பயில, ஞானச்

---

* இந் நூலாசிரியர் நான்காம் சந்தான தேவராகப் பிற்காலத்தில் சேர்க்கப்பட்டுள்ளார் — பதிப்பாசிரியர்

சார்பு தர வந்தருளி எம்மை ஆண்ட
சைவ சிகாமணி - மருதத் தலைவன் - அம் தண்
கார் மருவு பொழில் புடை சூழ் மதில் மீதே மதியம்
கடவாமை நெடும் கொடியின் கரம் தகையும் கடந்தைச்
சீர் நிலவு மறைஞான சம்பந்தன் எந்தை -
திரு வளரும் மலர் அடிகள் சென்னி வைப்பாம். 6

புறச் சமயத்தவர்க்கு இருளாய், அகச் சமயத்து ஒளியாய்
புகல் அளவைக்கு அளவாகி, பொன் பணிபோல் அபேதப்
பிறப்பு இலதாய் இருள் வெளிபோல் பேதமும், சொல் பொருள் போல்
பேதா பேதமும் இன்றி, பெரு நூல் சொன்ன
அறத்திறனால் விளைவதாய், உடல்-உயிர், கண் - அருக்கன்
அறிவு - ஒளிபோல், பிறிவு அரும் அத்துவிதம் ஆகும்
சிறப்பினதாய், வேதாந்தத் தெளிவாம் சைவ
சித்தாந்தத் திறன் இங்குத் தெரிக்கல் உற்றாம். 7

மூவகை ஆர் உயிர் வர்க்கம்; மலத்தார், கன்ம
மூல மலத்தார், மூன்றும் உடையார் அன்றே;
தீவகமாம் என உருவாய் வந்து, நாதன்,
திருநோக்கால், பரிசத்தால், திகழும் வாக்கால்,
பாவனையால், மிகு நூலால், யோகப் பண்பால்,
பரவி வரும் அவுத்திரியால், பாச நாசம்
மேவ, அருள் உதவும், அவுத்திரி இரண்டு திறனாம்;
வியன் கிரியை, ஞானம் என விளம்புமாறே. 8

விரும்பிய மந்திர அதிகாரம், அர்ச்சன அதிகாரம்,
மேவும் யோக அதிகாரம் எனச் சமயம், விசேடம்
வரும். பொருவு இல் நிருவாணம், மந்திரங்கள், பதங்கள்,
வன்னங்கள், புவனங்கள், தத்துவங்கள், கலைகள்
இரங்கு அடைவில் தொகை, பதினொன்று, எண்பத்தொன்று, ஐம்பத்தொன்று,
இரு நூற்றோடு இருபத்து நாலு, ஆறாறு, ஐந்தில்

பரந்த நெறி அறு வகையும் ஒருவி, நினைவு அரிதாம்
பர பதத்துள் உயிர் விரவப் பயிற்றும் அன்றே. 9

கிரியை என மருவும் அவை யாவும் ஞானம்
கிடைத்தற்கு நிமித்தம் எனக் கிளக்கும்; உண்மைச்
சரியை கிரியா யோகத் தன்மையோர்க்குச்
சாலோக சாமீப சாரூபங்கள்
மருவியிடும்; உயர் ஞானம் இரண்டாம்; மாறா
மலம் அகல அகலாத மன்னு போதத்
திருவருள் ஒன்று; ஒன்று அதனைத் தெளிய ஓதும்
சிவாகமம் என்று உலகு அறியச் செப்பும் - நூலே. 10

தெரித்த குரு முதல்வர் உயர் சிவஞான போதம்
செப்பினர்; பின்பு அவர் புதல்வர் சிவஞான சித்தி

விரித்தனர்; மற்று அவர்கள் திருவடிகள் போற்றி,
விளம்பிய நூல் அவை இரண்டும் விரும்பி நோக்கி,
கருத்தில் உறை திருவருளும் இறைவன் நூலும்
கலந்து, பொது உண்மை எனக் கருதி, யானும்
அருத்தி மிக உரைப்பன், வளர் விருத்தம் நூறும்
ஆசு இல் சிவப்பிரகாசம் ஆகும் அன்றே. 11

தொன்மையவாம் எனும் எவையும் நன்று ஆகா; இன்று
தோன்றிய நூல் எனும் எவையும் தீது ஆகா; துணிந்த
நன்மையினார், நலம் கொள் மணி பொதியும் அதன் களங்கம்
நவை ஆகாது என உண்மை நயந்திடுவர்; நடுவாம்
தன்மையினார், பழைமை அழக்கு ஆராய்ந்து தரிப்பர்;
தவறு நலம் பொருளின்கண் சார்வு ஆராய்ந்து அறிதல்
இன்மையினார், பலர் புகழில் ஏத்துவர்; ஏதிலர் உற்று
இகழ்ந்தனரேல் இகழ்ந்திடுவர்; தமக்கு என ஒன்று இலரே. 12

2. பதி இலக்கணம்

பல கலை, ஆகமம், வேதம், யாவையினும் கருத்து,
பதி பசு பாசம் தெரித்தல்; பதி பரமே; அதுதான்,
நிலவும் அரு உரு அன்றிக், குணம் குறிகள் இன்றி,
நின்மலமாய், ஏகமாய், நித்தமாகி,
அலகு இல் உயிர்க்கு உணர்வு ஆகி, அசலம் ஆகி,
அகண்டிதமாய், ஆனந்த உருவாய், அன்றிச்
செல அரிதாய், செல் கதியாய், சிறிது ஆகி, பெரிதாய்த்
திகழ்வது; தத் சிவம் என்பர், தெரிந்துளோரே. 13

நீடு பராசத்தி, நிகழ் இச்சா ஞானம்
நிறை கிரியை தர, அதனை நிமலன் மேவி,
நாடு அரிய கருணை திரு உருவம் ஆகி
நவின்று பல கலை, நாதம் விந்து ஆதி

கூடும் ஒளி வளர் குடிலை மாயை மேவி,
கொடு வினை கொள் தனு கரண புவன போகம்
பீடு பெற நிறுவி, அவை ஒடுக்கும் மேனி, 14
பிறங்கிய நிட்கள சகளப் பெற்றியாமே.

ஈங்கு இது என்றது கடந்த இயல்பினானும்,
ஈறு முதல் நடு ஒன்றும் இலாமையானும்,
ஓங்கி வளர் ஞான மயன் ஆதலானும்,
உண்மை பிறர்க்கு அறிவு அரிய ஒருமையானும்,
தாங்க அரிய வெறுப்பினொடு விருப்பும் எல்லாம்
சார்வு அரிய தனி முதல்வன் ஆதலானும்,
நீங்கல் அரும் உயிர்க்கு உயிராய் நிற்றலானும், 15
நிறுத்திடுவன் நினைந்த உரு, நிமலன்தானே.

உலகம் எலாம் - ஒருவனோடு ஒருத்தி ஒன்று என்று,
உளதாகி நின்று, அளவில் ஒடுங்கும்; பின்னும்,

மலம் அதனால், உளது ஆகும். உருவம் மாறி
வருவது போவது செல்வது ஆதலானும்,
அலைவு இல் அசேதனம் மாயை ஆதலானும்,
அணுக்கள் உரு அடையும் அறிவு இலாமையானும்,
நிலவு தொழில் மருவி உரு நிற்றலானும்,
நின்று எவையும் அளித்திடுவன் - நிமலன்தானே. 16

கந்த மலர் அயன் படைக்கும், உலகம் எல்லாம்;
கண்ணன் அளித்திடும்; அவை எம் கடவுள்தானே
அந்தம் உற அழித்திடுவன்; ஆதலாலே,
அயன் அரியும் அவனது உயர் அதிகாரத்து
வந்த முறை, தன் தொழிலே மன்னுவிப்பன்; எல்லாம்
வருவிப்பன்; விகாரங்கள் மருவான் - வானின்
முந்து இரவி எதிர் முளரி அலர்வுறும் ஒன்று; அலர்வான்
முகை ஆம் ஒன்று; ஒன்று உலரும் முறையின் ஆமே. 17

ஏற்ற இவை அரன் அருளின் திருவிளையாட் டாக
இயம்புவர்கள்; அணுக்கள் இடர்க் கடல் - நின்றும் எடுத்தே
ஊற்றம் மிக அருள் புரிதல் ஏது ஆக
உரை செய்வர்; ஒடுக்கம் இளைப்பு ஒழித்தல்; மற்றைத்
தோற்றம் மல பாகம் வர; காத்தல் போகம்
துய்ப்பித்தல்; திரோதாயி நிறுத்தல் ஆகும்;
போற்றல் அரும் அருள் அருளே; அன்றி, மற்றுப்
புகன்றவையும் அருள் ஒழியப் புகல் ஒணாதே. 18

3. பசு இலக்கணம்

எண் அரிதாய், நித்தமாய், இருள் மலத்தில் அழுந்தி,
இரு வினையின் தன்மைகளுக்கு ஈடான யாக்கை
அண்ணல் அருளால் நண்ணி, அவை அவராய், அதனால்
அலகு இல் நிகழ் போகங்கள் அருந்தும் ஆற்றால்

புண்ணிய பாவம் புரிந்து, போக்கு வரவு உடைத்தாய்
புணரும் இருள் மல பாகம் பொருந்தியக்கால், அருளால்
உள் நிலவும் ஒளி அதனால் இருள் அகற்றி, பாதம்
உற்றிடும் - நல் பசுவருக்கம் - என உரைப்பர், உணர்ந்தே. 19

4. பாச இலக்கணம்

ஏகமாய், தம் கால எல்லைகளின் மீளும்
எண் அரிய சத்தியதாய், இருள் ஒளிர இருண்ட
மோகமாய், செம்பில் உறு களிம்பு ஏய்ந்து நித்த
மூல மலமாய், அறிவு முழுதினையும் மறைக்கும்
பாகமாம் வகை நின்று, திரோதான சத்தி,
பண்ணுதலான், மலம் எனவும் பகர்வர்; அது, பரிந்து,
நாகம் மா நதி மதியம் பொதி சடையான் அடிகள்
நணுகும் வகை, கருணை மிக நயக்கும் தானே. 20

உன்னல் அரும் பரமசிவன் தன் அருளாலே, நாதம்
உதிக்கும், மிகும் குடிலைதனில்; விந்து வரும், நாதந்
தன்னில்; அதில் ஒளி வரும் சதாசிவர் ஆம்; அவரில்
தயங்க வரும், ஈசர்; வித்தைதனை அளிப்பர்; அதனால்
மன்னுவர், இவ் வகை ஐவர், வாய்மையினால் முன்னே
வந்திடும் என்று உரைசெய்த விந்து, வழா வகையே
முன் உதவும், சூக்குமாதி ஒரு நான்கும் - என்று
மொழிந்திடுவர், அரும் கலைகள் முதிர்ந்துளோரே. 21

உரு ஆதி சதுர் விதமாய், ஒன்று ஒன்று ஒவ்வா
உண்மையதாய், நித்தமாய், ஒன்றாய், என்றும்
அரு ஆகி,கன்ம அந்தம் அணுக்கள் யார்க்கும்
ஆவாரமாய், அசித்தாய், அசலம் ஆகி,
விரிவாய தன் செயலில் வியாபியாய், எல்லாம்
விரிந்த வகை புரிந்து அடைவின் மேவி அவை ஒடுங்க

வரு காலம், உயிர்கள் எல்லாம் மருவு இடமாய், மலமாய்
மன்னியிடும் - அரன் அருளால் - மாயைதானே. 22

என்னை இது எனில், உலகுக்கு உபாதானம் இல்லை
இறைவன் அலது எனின், அசித்துச் சித்தினிடத்து உதியா;
மன்னி உளதேல், முதல்வன் என்கொல் என்னின்,
மாயைதான் அசித்து உருவாய் மருவ மாட்டாது;
அன்னவனும் இது ஒழிய ஆக்க மாட்டான்;
அசத்தனாம் எனின், அதுவும் அவன்போல் நித்தம்;
முன்னவன் அவ் அசித்தை விரித்து எவையும் ஆக்கும்;-
முதன்மை அது கொடுத்தது என மொழிந்திடாரே. 23

படைத்தது ஒருபடி இன்றிப் பறவை, பசு, நாராப்
பண்ணியது என்? முன்னை வினைப் பான்மை என்பர்;
அடுத்த வினை உளதாகில் இறை ஏன் என்னில்,
அசேதனம்; மற்றவை, ஆவிக்கு அமைத்தது ஆகும்;

எடுத்த வினை உரு உறுவது உயிரேல், தானே
இரு வினைக்குத் தக்க உடல் எய்தும் என்னில்,
சடத் திரளும் கர்த்தாவாய் அறிவு ஒன்றும் இல்லாத்
தன்மையனும், கூட ஒரு சங்கை இன்றே. 24

அல்லல் மிக உயிர்க்கு, இவைதான் அணைத்தது, ஈசன் -
அரு வினைகள் அருந்துதற்கோ, வினையோ அன்றிச்
சொல்லி வரும் மாயையோ அணுவை முந்தச்
சூழ்ந்தது எனும் உரை முதல் ஓர் தொடக்கு இலார்பால்
ஒல்லை வரும் எனின், உளதாம்; உயிர் உண்டாவே
உளது மலம்; மலம் உளதா ஒழிந்த எல்லாம்
நெல்லின் முளை தவிடு உமிபோல் அநாதியாக
நிறுத்திடுவர்;- இது சைவம் நிகழ்த்துமாறே. 25

அருத்தி மிகும் கலை காலம் நியதியுடன் வித்தை
அராகம் இவை - அநந்தரால், மாயைதனில் ஆகும்;

உருத்திரரால் கலை அதனில் பிரகிருதி குணங்கள்
உள ஆகும்; அகங்காரம், புத்திதனில் உதிக்கும்;
தெரித்த இது திரிவிதமாம் - தைசத, வைகாரி,
திகழ்தரு பூதாதி என; திருந்திய சாத்துவிகம்
விரித்த குணம் மனம் புத்தி இந்திரியம் என்று
விளம்பிய சோத்திராதி முதல், விளங்கியிடும் விரிந்தே. 26

மன்னிய கன்மேந்திரியம் ஆன இராசதம் சேர்
வாக்கு ஆதி வைகாரி மருவி வரும்; சத்தம்
தன்னை முதலாகிய தாமதம் மிகும் மாத்திரை பின்
தரும்; அதனில் வான் அனிலம் அனல் புனல் மண், சத்தம்
முன்னதனில் வெளியாதி ஒன்றுஒன்று ஆகும்
முறையில் உறும்; இருமை அயன் முடிவா முன்னே
உன்னு சதாசிவர் ஆதி அதிபதிகள், ஒடுக்கம்
உதித்த அடைவு என உரைப்பர் உணர்ந்துளோரே. 27

நண்ணியிடும் உரு - அதனுக்கு ஏதுஆகி,
நானா போகங்கள் ஆய், நாச உற்பத்தி
பண்ணிவரும் ஆதலால், அனாதி ஆகி,
பல ஆகி, அணுக்கள்தொறும் படர்வது ஆகி,
எண்ணி வரு மனம் வாசம் கன்மத்தால் இயற்றும்
இயல்பினதாய், மதி கதமாய், இரு பயனாம் பாவ
புண்ணியமாய், புலர் காலை, மாயை மேவிப்
பொருந்தும்; இது கன்ம மலம் புகலுமாறே. 28

கன்ம நெறி திரிவிதம்; நல் சாதி ஆயு போகக்
கடனது என வரும்; மூன்றும் உயிர் ஒன்றில் கலத்தல்
தொன்மையது; ஊழ் அல்லது உண்வு ஆகா; தானும்
தொடங்கு அடைவின் அடையாதே தோன்றும், மாறி;
தன்மை தரு தெய்விகம் உத்பவுதிகம் ஆன்மிகமாம்
தகையில் உறும் அசேதன சேதனத்தாலும் சாரும்;

நன்மையொடு தீமை தரு சேதனனுக்கு இவண் ஊண்
நாடில், அதன் ஊழ்வினையால் நணுகுந்தானே. 29

மேலைக்கு வரு வினை ஏது என்னில், அங்கண்
விருப்பு வெறுப்பு என அறி; அவ் விளைவும் எல்லாம்
மூலத்த வினைப் பயில்வாம் என்னின், நாம் என்
முற்றி அதன் பயன் உனக்கு முளைக்கும் என்பர்;
ஞாலத்து வினைகள் இரு திறம் ஆகும் - புந்தி
நண்ணாத வினை, நணுகும் வினை என; ஒன்று இரண்டாய்
ஏலத்தான் இதம் அகிதம் ஆம்; இதனால் வழுவாது
எய்தியிடும், புண்ணிய பாவங்கள் என்றே. 30

உற்றதொழில் நினைவு உரையில் இரு வினையும் உளவாம்;
ஒன்று ஒன்றால் அழியாது; ஊண் ஒழியாது, உன்னில்;

மற்று அவற்றின் ஒரு வினைக்கு ஓர் வினையால் வீடு,
வைதிக சைவம் பகரும் மரபில், ஆற்ற,.
பற்றியது கழியும்; இது விலையால் ஏற்கும்
பான்மையும் ஆம்; பண்ணாது பலிக்கும்; முன்னம்
சொல் தரு நூல் வழியின் வரின், மிகுதி சோரும்;
சோராது அங்கு அது மேலைத் தொடர்ச்சியாமே. 31

மோகம் மிக உயிர்கள்தொறும் உடனாய் நிற்கும்
மூல ஆணவம் ஒன்று, முயங்கி நின்று
பாகம் மிக உதவு திரோதாயி ஒன்று,
பகர் மாயை ஒன்று, படர் கன்மம் ஒன்று,
தேகம் உறு கரணமொடு புவன போகச்
செயல் ஆரும் மாமாயைத் திரட்சி ஒன்று, என்று
ஆக மலம் ஐந்து என்பர்; ஐந்தும் மாறாது
அருள் என்பது அரிது என்பர், அறிந்துளோரே. 32

5. அவத்தை இலக்கணம்

ஓங்கி வரும் பல உயிர்கள் மூன்று அவத்தை பற்றி
உற்றிடும்; கேவலம், சகலம், சுத்தம் என உணர்வர்;
ஈங்கு வரும் கலாதியொடு குறி உருவம் ஒன்றும்
இன்றி, மலம் அன்றி ஒன்றும் இல்லை எனும் இயல்பாய்,
ஆங்கு அறிவை அறிவு அரிதாய், அறி கருவி அணையா
ஆதலினால், இருள் மருவும் அலர்விழிபோல் அதுவாய்,
நீங்கும் வகை இன்றி, நித்த வியாபகமாய் அங்கண்
நிற்பது கேவலம் என்று நிகழ்த்தும் நூலே. 33

இன்மை மலம்; மாயை கன்மம் என்று இரண்டே; இறைதான்
இலங்கு பல உயிர்களும் முன் புரிந்த இரு வினையின்
தன்மைகளால், எவர்களுக்கும் தனு கரண புவனம்
தந்திடும்; இங்கு இதனாலே, இரு பயனும் சார்ந்து

கன்மம் எலாம் நேராக நேராதல் மருவ,
கடவுள் அருளால் எவையும் கழித்திடுவன்; அதனால்
பின் மலம் ஆனவை அணுகா, பெருகு ஒளி முன்பு உளதே
பெற்றிடும் - என்று இத் திறம் என் பேசுமாறே. 34

மாயை முதல் என வினையின் பான்மை முதல் எனவே
மன்னு பனை விதை மரபின் மயங்கும்; மலம் சுத்தற்கு
ஏயும் நெறி என்கொல்? அதன் இயல்பு ஆயின், முத்தி
என்பது என்? மற்று இவை நிற்க, இரும் கலாதி உணர்வாய்
மேய பினர், தன் உருவம் விளங்காமை விளக்கும்
மிகும் உலகம்தனில் என்னில், இவை விடுங்கால் உணர்வுள்
தோயும் நெறி இலதாதல் அறியாமை என நீ
சொல்லியது மலம் என்பர், துணிந்துளோரே. 35

அந்நியம் ஆனவை உணர்த்தி அநந்நியமாய் நிறைந்த
அறிவு அறியாமையினானும், அருள் நிலவும் காலம் -

தன்னில் அவனே யாவுமாய் நின்ற தொன்மை
தாம் உணர்தலானும், உயிர் தான் என ஒன்று இலதா
மன்னியிடும் - மலம்; மாயை கன்மங்கள் மாறி
வந்திடும்; இங்கு இது வழுவாது; ஆதலினான் மனத்தால்
உன் அரிய திருவருளை ஒழிய மலம் உளது என்று
உணர்வு அரிதாம்; அதன் உண்மை தெரிவு அரிதாம், உனக்கே. 36

புகலும் மலம் ஒழித்தற்கு, கலாதி முதல் மாயை
பொருந்தியிடும், அரன் அருளால்; போதம், தீபம்
சகலம் எலாம் உடன் ஆயவாறு போலும்;
தரும் அருளை, மலம், உயிர்கள் சாராமல் மறைக்கும்;
இகலி வரும் இவை உணரின், இருள் வெளியாம் தன்மை
எய்தும் வகை தன் செய்தி, இலங்கும் விந்து
பகர்வு அரிய உணர்வாகி, ஒளியாய் உள்ளப்
பான்மையினால், ஒரு நாதம் படரும்தானே. 37

வந்து அடைந்து பின்னமாய் வன்னங்கள் தோற்றம்
வரும் அடைவுபட ஒடுக்கி, மயில் அண்ட சலம் நேர்
சிந்தைதனில் உணர்வாகும், பைசந்தி; உயிரில்
சேர்ந்து வரும் அவை மருவும் உரு எவையும் தெரித்து,
முந்தியிடும் செவியில் உறாது, உள் உணர்வாய், ஓசை
முழங்கியிடும், மத்திமைதான்; வைகரியில், உதானன்
பந்தம் உறும் உயிர் அணைந்து வந்த மொழி, செவியின்
பால் அணைய, நினைந்த பொருள் பகரும்தானே. 38

இத் தகைமை இறை அருளால் உயிர் அறியும் அறிவுக்கு
ஈடாக, வாடாதே ஈர் - இரண்டின் உரைத்த
வித்தை முதல் ஐவரான், விளங்கும் ஞானம்
மேவியிடும் என உரைப்பர்; அசுத்த மாயை
வைத்த கலைதான் மூல மலம் சிறிதே நீக்கி
மருவும் வகை தெரிவிக்கும்; வாயில்களின் பயனைப்

புத்தி தர, வித்தை, இடை நின்று அறிவை உயிர்க்குப்
பொருத்தியிடும் வகை புணரும், புனித சத்தி புணர்ந்தே. 39

பேச அரிய அராகம், தம் கன்மத்துக்கு ஈடாப்
பெற்றதனில் ஆசைதனைப் பெருகுவிக்கும்; நியதி,
தேசம் மிகும் அரசர் தரும் ஆணை செய்தி
செய்தவரைத் துய்ப்பிக்கும் செய்தி போல,
நேசம் உறும் தம் கன்மம் நிச்சயித்து நிறுத்தும்;
நிகழ் காலம் கழி காலம் எதிர் காலம் என்றே
ஓசை தர வரும் காலம், எல்லை பலம் புதுமை
உறுவிக்கும் - இறை சத்தி உடனாய் நின்றே. 40

ஐ வகையால் உறு பயன்கள் நுகர வரும் காலம்
அது புருட தத்துவம் என்று அறைந்திடுவர், அறிந்தோர்;
மெய் வகைய கலா சுத்திதனில் இதற்கும் சுத்தி
மேவியிடும் வகைதானும் விரும்பிய நூல் விளம்பும்;

செய் வகையின் தொடர்ச்சி இங்குத் தோற்றுவிக்கும் குணத்தின்
சேர்வு புரி பிரகிருதி திரி குணமாம்; அவைதாம்
இவ் வகையால் சாத்துவிக ராசத தாமதமாய்
இயம்புவர்கள்; ஒன்று இரண்டு குணம் ஏற்கை உடைத்தே. 41

அலகு இல், குணம்; பிரகாசம் லகுதை, வியாவிருதி
அடர்ச்சி, மிகும் கௌரவம் அநியமம் - இவை அடைவே
நிலவியிடும்; மும்மூன்றும் உயிர் ஒன்றில் கலந்தே
நிற்கும்; இவை நிறை புலனின் பயன் எவையும் கவரும்;
குலவி வரு போகம் கொள் இடமாம்; மாறாக்
குறைவு இல் ஒளியாம்; அலகு இல் புலனிடத்தில் ஒருமை
பல வகையும் உடையதாய்ப் பரன் அருளால் புந்தி
பஞ்சாசத் பாவகமும் பண்ணுவிக்கும்தானே. 42

ஆன தனு அதனில் உறும் அநிலனையும் இயக்கி,
ஆங்காரம் - நீங்காத அகந்தைக்கு வித்தாய்,

யான் அலது பிறர் ஒருவர் எனை ஒப்பார் புவியில்
இல்லை எனும் இயல்பினதாய், இந்திரியம் புலன்கள்
தாம் நுகரும் அளவில், அதில் முந்தி உறும்; இச்சை
தான் உருவாய்ச் சங்கற்ப சதாகதியும் தந்து,
மானதமானது - நிற்கும்; சிந்தை நினைவு; ஐயம்
வந்து தரு மனம் ஒழிய வகுப்ப - ஒணாதே. 43

சொன்ன முறை, செவி துவக்கு நோக்கு நாக்குத்
துண்டம் இவை ஐந்திற்கும் தொகு விடயமாக,
மன்னிய சத்தப் பரிச ரூப ரச கந்தம்,
மருவியிடும், இவை அடைவே; வாக்குப் பாதம்
பின்னர் வரு பாணி மிகு பாயுவினோடு உபத்தம்
பேசல் உறும் ஐந்திற்கும், பிறங்கு ஒளிகொள் வசனம்
உன்ன அரிய கமன தான விசர்க்க ஆனந்தம்
உற்ற தொழில் பெற்றிடுவது உண்மையாமே. 44

முந்திய ஐம் பூதங்கள் வான் ஆதியாக
முயங்கிய நல் செவி நாசி கண் நா மெய்ம் முறையால்
இந்தவயின் நின்று, வரும் ஐம் புலனும் உயிர்தாம்
எய்தும் வகை தம் உருவின் இலங்கியிடும்; புறத்து
வந்து அடைய இடம் கொடுக்கும், நிரந்தரமாய், வானம்;
வாயு மிகச் சலித்து எவையும் திரட்டும்; தீ வெம்மை
தந்து அவை சுட்டு ஒன்றுவிக்கும்; நீர் குளிர்ந்து பதமே
தரும்; உரத்துத் தரிக்கும், முந்து தரணிதானே. 45

இந் நிலையில் – ஐந்து சுத்தம் ஏழ் சுத்தா சுத்தம்,
எண் மூன்று அசுத்தம் எனும் இவை முப்பத்தாறாம்;
மன்னிய தத்துவங்களிடை மயங்கி, நெடும் துயர்தாம்
மருவும்; உரு நிலை அழிய வரும்பொழுது, வரி ஆர்
பன்னகம் அண்டசம் கனவு படர் வகையே முன்னம்
பகர வரும் கலாதி நிலை பரவிய சூக்குமம் ஆம்

தன் உருவின் அணைந்து, பயன் அருந்தி, அரன் அருளால்
தரையினிடை வரும் என்று சாற்றும், நூலே. 46

தோற்றியிடும் அண்டசங்கள், சுவேதசங்கள், பாரில்
துதைந்து வரும் உற்பிச்சம், சராயுசங்கள், நான்கின்
ஊற்றம் மிகு தாவரங்கள் பத்தொன்பது என்றும்,
ஊர்வ பதினைந்து, அமரர் பதினொன்றோடு, உலவா
மால் தரும் நீர் உறைவன நல் பறவைகள் நாற்காலி
மன்னியிடும் பப்பத்து; மானுடர் ஒன்பதும் ஆ
ஏற்றி ஒரு தொகை அதனில் இயம்புவர்கள் - யோனி
எண்பத்து நான்கு நூறாயிரம் என்று எடுத்தே. 47

இனைய பல பிறவிகளின் இறந்து பிறந்து அருளால்
இரு வினைகள் புரிந்து அருந்தும் இது சகலம்; அகலா
முனம் மருவும் இரு பயனும் ஒரு காலத்து அருந்த,
முந்து நுகருந்து பயன் அந்தம் உற வந்த

வினையும் எதிர் வினையும் முடிவினை உதவு பயனால்,
நேராக நேராதல் மேவுங்கால், முன்
சினம் மருவு திரோதாயி கருணை ஆகித்
திருந்திய சத்திநிபாதம் திகழும் அன்றே. 48

நாடிய சத்திநிபாதம், நாலு பாதம்
நண்ணும் வகை; எண் அரிய ஞான பாதம்
கூடும் அவர் தமக்கு உணர்வாய் நின்ற ஞானக்
கூத்தன் ஒரு மூர்த்தி கொடு குறுகி, மோகம்
நீடிய கேவல சகலம் நிகழாவாறு
நிறுத்தி, மலம் அறுக்கும்; இது நிலை ஆர் சுத்தம்;
கேடு இல் புகழ் தரும் சரியை கிரியா யோகக்
கேண்மையரேல், இவை உணர்த்தக் கிளக்கும், நூலே. 49

அரிவையர் இன்புறும் முத்தி, கந்தம் ஐந்தும்
அறும் முத்தி, திரி குணமும் அடங்கும் முத்தி,

விரவு வினை கெடும் முத்தி, மலம் போம் முத்தி,
விக்கிரகம் நித்தம் முத்தி, விவேகம் முத்தி,
பரவும் உயிர் கெடும் முத்தி, சித்தி முத்தி,
பாடாணம் முத்தி, இவை பழிசேர் முத்தி;
திரி மலமும் அகல உயிர் அருள் சேர் முத்தி
திகழ் முத்தி; இது முத்தித் திறத்தது ஆமே. 50

II. உண்மை அதிகாரம்

இங்கு இவை பொது இயம்பும் என்பர்கள். இதன்மேல், ஆன்மா,
தங்கிய அஞ்சு அவத்தை தன் உண்மை, உணர்த்தும் தன்மை
பொங்கு ஒளி ஞான வாய்மை, அதன் பயன், புனிதன் நாமம்,
அங்கு அதில் அணைந்தோர் தன்மை, அறைகுவன், அருளினாலே. 51

1. ஆன்ம இலக்கணம்

செறிந்திடும் உடலுள் மன்னி, சேர் புலன், வாயில் பற்றி
அறிந்து அதில் அழுந்தும்; ஒன்றும் அறிந்திடாது, அறியும் தன்மை,
பிறிந்து அடை அஞ்சு அவத்தை பெருகிய மலத்தால் பேணி,
உறும், தனி அதீதம்; உண்மை, உயிர்க்கு என உணர்த்தும் அன்றே. 52

உரு உணர்வு இலாமையானும்; ஓர் ஒரு புலன்களாக
மருவி நின்று அறிதலானும், மனாதிகள் தம்மில் மன்னித்
தரு பயன் நுகர்தலானும், உயிர் சடம் ஆதலானும்
அரு வினை உடலுள் ஆவி அறிவினால் அறியும் அன்றே. 53

அறிவு எனில் வாயில் வேண்டா; அன்று எனில், அவைதாம் என்னை?
அறிவதை உதவும் என்னில், அசேதனம், அவைதாம்; எல்லாம்.
அறிபவன் அறியும் தன்மை அருளுவன் என்னில், ஆன்மா
அறிவு இலது ஆகும்; ஈசன் அசேதனத்து அளித்திடானே. 54

அறிவினால் அறிந்த யாவும் அசத்து ஆதல் அறிதி; என்றும்
அறிவினால் அறிய ஒணாதேல், ஆவது ஒன்று இன்மை; தொன்மை
அறிவுதான் ஒன்றை முந்தி அது அதுவாகக் காணும்
அறிவு காண்; அசத்து மற்று அது அறிவினுக்கு அறிய ஒணாதே. 55

எவ் அறிவு, அசத்து அறிந்தது, எனில் - உயிர் அறியாது; ஈசன்
அவ் அறிவு அறியான்; அல்லது அசேதனம் அறியாது; ஆவி
செவ்விய கருவி கூடின் தெரிவு உறாது; அருளில் சேராது,
உவ் இரு வகையது என்னில், ஒளி இருள் ஒருங்கு உறாவே. 56

சத்து இது என்று, அசத்துத்தான், அறியாது; அசத்தைச்
சத்து அறிந்து அகல வேண்டா; அசத்து இது, சத்து இது என்று, ஓர்
சத்து, இருள் ஒளி அலாக் கண் தன்மையதாம்; அசத்தைச்
சத்துடன் நின்று நீக்கும் தன்மையால், சதசத்து ஆமே. 57

கண் ஒளி விளக்கு அளித்துக் காட்டிடும் என்னின், முன்னம்
கண் ஒளி ஒன்றும் இன்றாம்; விளக்கு ஒளி கலந்தவற்றைக்
கண் ஒளி அகல நின்றே கண்டிடும்; வேறு காணா;
கண் ஒளி விளக்கின் சோதி கலந்திடும்; கருத்து, ஒன்று அன்றே. 58

ஓர் இடத்து இருத்தல், மாயா உரு நிறைந்திடுதல், ஒன்றாம்
பேரிடத்து உறைதல், தானே பிறங்கு அறிவாகி நிற்றல்,
சோர்வுடைச் சடம் நிகழ்த்தல் எனும் இவை - சொல்லார் - நல்லோர்
ஓர் இடத்து, உணரும் உண்மை, ஒளி தரும் உபலம் போலும். 59

2. ஐந்தவத்தை இலக்கணம்

எண்ண ஒன்று இலாது, அதீதம்; எய்திய துரியத்து ஒன்று
நண்ணிடும்; சுழுத்தி தன்னில் நயந்து உளது ஒன்று; பின்னும்,
அண்ணிடும்; கனவு தன்னில் ஆறு ஏழ் ஆம். சாக்கிரத்தின்
கண் உறும், அஞ்சு ஆறு ஆய; கருவிகள் மருவும் தானே. 60

இவ் வகை அவத்தை தன்னில் எய்திடும் கரணம் எல்லாம்,
மெய் வகை இடத்தில் உற்று மேவுமா கண்டு, மிக்க
பொய் வகைப் பவம் அகற்றப் புரிந்திடில், அருளால் ஆங்கே
ஐ வகை அவத்தை உய்க்கும்; அறிவினால் அறிந்துகொள்ளே. 61

நீக்கம் இல் அதீதம் மாசு நிறைந்த கேவலம் ஆம் நீர்மை;
சாக்கிரம், கலாதி சேர்ந்த சகலமாம் தன்மை ஆகும்;
ஊக்கம் இல் இரண்டும் கூடாது ஒழிய ஓர் நிலையில் நீடும்
சாக்கிராதீதம்; சுத்தத் தகைமையது ஆகும் தானே. 62

3. உணர்த்தும் தன்மை

மருவிய பொறியில் ஒன்றும், மா பூதம் ஐந்தில் ஒன்றும்,
கருவிகள் நான்கும் நீங்காக் கலாதிகள் ஐந்தும் கூடி,
ஒரு புலன் நுகரும்; இந்த ஒழுங்கு ஒழிந்து உயிரும் ஒன்றைத்
தெரிவுறாது; அவன் ஒழிந்து அத் திரள்களும் செயல் இலாவே. 63

தனக்கு என அறிவு இலாதான், தான் இவை அறிந்து சாரான்;
தனக்கு என அறிவு இலாத வாயில்தான் அறியா, சார;
தனக்கு என அறிவு இலாதான் தத்துவ வன்ன ரூபன்;
தனக்கு என அறிவானால் இச் சகலமும் நுகரும் தானே. 64

கண்டு அறி புலன்கள் காணும், கருத்தினால்; ஒருத்தன் ஞானம்
கொண்டு உளம் அறியும் என்னில், கொள்பவன் முதலி ஆகும்;
மண்டிய உணர்வு உயிர்க்கா மன்னி நின்று அறியும் என்னில்,
உண்டிட வேண்டுவானுக்கு ஒருவன் வேறு உண்டல் ஆமே. 65

இருள் நனி - இரவிதான் வந்து - இரித்தலும், இரவில் எண்ணும்
பொருள் நிலை கண்டு மாந்தர் பொருந்திடுமாறு போல,
மருள் நிலை எங்கும் நீங்க, மகிழ்ந்து உயிர், தன்னுள் மன்னும்
அருளையும் ஒழிய, ஞாலத்து அறிந்தவாறு அறியும் அன்றே. 66

அறிந்திடும் மனாதி வாயில் ஆனவை அவன்தனாலே
அறிந்திடும் என்றும்; ஒன்றும் அறிந்திடா; அவை போல் யாவும்

அறிந்திடும்; அறியும் தன்மை அறிந்திடா; கன்மத் தொன்மை
அறிந்து அவை நுகருமாறும் அருளுவன் - அமலன் தானே. 67

4. ஞான வாய்மை

காட்டிடும் கரணம் ஒன்றும் இல்லையேல் காண - ஒணாதாம்;
நாட்டிய இவற்றால் ஞானம் நணுகவும் ஒண்ணா; முன்னம்
ஈட்டிய தவத்தினாலே, இறை அருள் உருவாய் வந்து,
கூட்டிடும் - இவற்றை நீக்கிக் குரை கழல் குறுகுமாறே. 68

பல் நிறம் கவரும் தொன்மைப் படிகம் நீடு ஒளியும் பன்மை
மன் இலங்கு இயல்பும் தந்த வளர் ஒளி போல, வையம்
தன் அகம் பயிலும், நல்சித் - சடங்களின் தன்மை தாவா
நல் நலம் பெற நிறைந்த ஞானமே ஞானம் என்பர். 69

மாயை, மா மாயை, மாயா வரும் இரு வினையின் வாய்மை
ஆய, ஆர் உயிரின் மேவும் மருளினில் இருளாய் நிற்கும்;

மாயை, மா மாயை, மாயா வரும் இரு வினையின் வாய்மை
ஆய ஆர் உயிரின் மேவும் அருளினில் ஒளியாய் நிற்கும். 70

5. ஞானப் பயன்

தேசு உற மருவும் ஆன்ம தெரிசனம், ஆன்ம சுத்தி,
ஆசு இலா ஆன்ம லாபம் - ஆக மூன்று ஆகும். மூன்றும்,
பாசம்அது அகல ஞானம் பற்றல், தான் பணியை நீத்தல்,
ஏசு இல் நேயத்து அழுந்தல் எனும் இவற்று அடங்கும் அன்றே. 71

தன் அறிவதனால் ஏதும் தனக்கு அறிவு இல்லையேனும்,
தன் அறிவாக, எல்லாம் தனித் தனி, பயன் அருந்தும்.
தன் அறிவு அறியும் தன்மை, தன்னாலே தனை அறிந்தால்,
தன்னையும் தானே காணும் - தான் அது ஆகி நின்றே. 72

தத்துவம் ஆனவற்றின் தன்மைகள் உணரும் காலை,
உய்த்து அறிந்திட உதிப்பது ஒளி வளர் ஞானம் ஆகும்;

அத் தன்மை அறியுமாறும் அகன்றிட, அதுவாய் ஆன்மாச்
சுத்தமாம்; சுத்த ஞானத்து ஒரு முதல் தோன்றும் அன்றே. 73

உறை தரும் உணர்வும் அன்றி அதன் முதல் உள்ளது என்று இங்கு
அறைவது என் என்னில், அண்ணல் அருள் எனும், அதுவே, அன்றி,
நிறை ஒளி முதலது அன்றி நின்றிடா; நிமலன் ஆகும்
இறையவன் முதல்; அவன் தன் - இலங்கு அருள் - சத்தியாமே. 74

சுத்தமாம் சத்தி ஞானச் சுடர் ஆகும்; சிவம் ஒழிந்து, அச்
சத்திதான், இன்றாம்; முன்னைத் தகவு இலா மலங்கள் வாட்டி
அத்தனை அருளும் - எங்கும் அடைந்திடும் இருள் அகற்றி
வைத்திடும் இரவி காட்டும் வளர் ஒளி போல் - மகிழ்ந்தே. 75

புகல் அரும் அசத்தர் தம்பால் பொருந்திய அலகையே போல்,
அகிலமும் உணரும் ஈசன் அருள் உயிர் மேவலாலே,
சகலமும் நிகழ வேண்டும்; தலைவன் ஐந்தொழிலும் தானே
இகல் அற இயற்றல் வேண்டும் - என்றது, நன்றி இன்றே. 76

இன்று, நோக்கு உரை நடக்கும் இயல்பு இலோற்கு, இனைய வாய்ந்து
நின்றதோர், அலகை சேர்ந்தால் நிகழ்வது என்? அதுபோல் உள்ளத்து
ஒன்றிய உணர்வு தம்பால் உள்ளது நிகழ்த்தும்; ஈசன்
தன் தொழில் நடாத்தும், மேனி தனக்கு எனக்கொன்டு தானே. 77

இந் நிலை தன்னில் மன்னி எய்திடும், கலாதி போதம்
தன் அளவு அறிந்து, நிற்கும் தகவு இலா மலங்கள் நீத்த
அந் நிலை, கரணம் ஆகா வகை அதில் அறிவு அடங்கி
மன்னிட, வியாபியாய வான் பயன் தோன்றும் அன்றே. 78

அடைபவர் சிவமே ஆகும் அது அன்றித் தோன்றும் என்ற
கடனது ஏது என்னில், முன்னம் கண்டிடார் தம்மைப், பின்னும்
தொடர்வு அரும், அருளினாலும் தோன்றுமா காணாராயின்,
உடையவன் அடி சேர் ஞானம் உணர்தல் இன்று; அணைதல் இன்றே. 79

பொற்பு உறு கருவி யாவும் புணராமே, அறிவிலாமைச்
சொல் பெறும் அதீதம் வந்து தோன்றாமே, தோன்றி நின்ற

சிற்பரம் அதனால், உள்ளச் செயல் அறுத்திட, உதிக்கும்
தற்பரம் ஆகி நிற்றல், சாக்கிராதீதம் தானே. 80

ஒடுங்கிடா, கரணம் தானே, ஒடுங்கும் ஆறு உணர்ந்து ஒடுக்க
ஒடுங்கிடும் என்னில் - நின்றது ஒடுங்கிடா, கரணம் எல்லாம்
ஒடுங்கிட ஒடுங்க, உள்ள உணர்வுதான் ஒழியும், வேறாய்
ஒடுங்கிடின் அன்றி, மற்ற உண்மையை உணர் ஒணாதே. 81

பற்றிடும் கருவி யாவும் படர்ந்து உணர்வு அளிக்கும் காலை,
உற்று அறிந்திடுவது, ஒன்றின் உணர்வினின் உண்மை ஆகும்;
மற்று அது பகல் விளக்கின் மாய்ந்திட வருவது உண்டேல்,
பெற்றிடும், அதனை; மாயப் பிறப்பினை அறுக்கலாமே. 82

முந்திய ஒருமையாலே மொழிந்தவை கேட்டல், கேட்டல்
சிந்தனை செய்தல், உண்மை தெளிந்திடல், அது தான் ஆக
வந்தவாறு எய்த நிட்டை மருவுதல் - என்று நான்கு ஆம்;
இந்தவாறு அடைந்தோர் முத்தி எய்திய இயல்பினோரே. 83

பாசம் ஆம் ஞானத்தாலும், படர் பசு ஞானத்தாலும்,
ஈசனை அறிய ஒண்ணாது; இறை அருள் ஞானம் நண்ணி
தேசு உறும் அதனால் முன்னைச் சிற்றறிவு ஒழிந்து, சேர்ந்து
நேசமோடு உயர் பரத்து நிற்பது ஞான நிட்டை. 84

விளம்பிய வகையில் நிட்டை மேவிடல் அரிதேல், முன்னம்
அளந்து அறிவு அளித்தவற்றின் அளவும், மற்று அவற்றினாலே
உளம்கொளும்தனையும், உள்ளபடியும், உற்று உணர்ந்து, செவ்வே
தளர்ந்திடாது உவப்ப, மற்று அத்தன்மையது ஆகும் தானே. 85

பாவிக்கின் மனாதி வேண்டும்; பயன் இலை; கரணம் நீத்துப்
பாவிப்பன் என்னில், என்ன? பழுது உள; பாவகத்தால்
பாவிக்க ஒண்ணாது என்று பாவிப்பன் என்னின், நீ என்?
பாவிக்க வேண்டா, ஆண்ட பரன் அருள் பற்றினோர்க்கே. 86

ஒன்று இரண்டாகி ஒன்றின் ஒருமையாம்; இருமையாகி
ஒன்றின் ஒன்று அழியும்; ஒன்றாது என்னின் ஒன்று ஆகா; தீயின்

ஒன்று இரும்பு உறழின் அன்றாம்; உயிரின் ஐந்தொழிலும் வேண்டும்;
ஒன்றி நின்று உணரும் உண்மைக்கு உவமை ஆணவத்தோடு ஒன்றே. 87

அழிந்திடும் பாசம் என்னின், நித்தம் என்று உரைத்தல் வேண்டா;
அழிந்திடாது என்னின், ஞானம் அடைவது கருத வேண்டா;
அழிந்திடும் சத்தி, நித்தம் அழிந்திடாது; ஒளியின் முன்னர்
அழிந்திடும் இருளும், நாசம் அடைந்திடா மிடைந்திடாவே. 88

எல்லை இல் பிறவி நல்கும் இரு வினை, எரி சேர் வித்தின்
ஒல்லையில் அகலும்; ஏன்ற உடல் பழ வினைகள் ஊட்டும்;
தொல்லையில் வருதல் போலத் தோன்று இரு வினைகள் உண்டேல்,
அல் ஒளி புரையும் ஞானத் தழல் உற, அழிந்துபோமே. 89

6. புனிதன் நாமம்

பந்தமானவை அறுத்துப் பவுதிகம் உழலும் எல்லை,
சந்தியாது ஒழியாது; இங்குத் தன்மைபோல், வினையும் சாரும்;

அந்தம் ஆதிகள் இலாத அஞ்சு எழுத்து, அருளினாலே
வந்தவாறு, உரை செய்வாரை வாதியா பேதியாவே. 90

திரு எழுத்து அஞ்சில், ஆன்மா,திரோதம் ஆக, அருள் சிவம் சூழ்
தர, நடு நின்றது, ஒன்றாம் தன்மையின், தொன்மை ஆகி
வரும் மன மிகுதியாலே வாசியில் ஆசை இன்றிக்,
கருவழிச் சுழலும்; மாறும் காதலார்க்கு ஓதலாமே. 91

ஆசு உறு திரோதம் மேவாது அகலுமா, சிவ முன் ஆக
ஓசைகொள் அதனின், நம்மேல் ஒழித்து அருள் ஓங்கும்; மீள
வாசியை அருளும்; மாய மற்றது பற்றா, உற்று அங்கு
ஈசனில் ஏகம் ஆகும்; இது திரு எழுத்தின்.ஈடே. 92

7. அணைந்தோர் தன்மை

தீங்கு உறு மாயை சேரா வகை, வினை திரி விதத்தால்
நீங்கிட, நீங்கா மூல நிறை இருள் இரிய, நேயத்து

ஓங்கு உணர்வு அகத்து அடங்கி, உளத்துள் இன்பு ஒடுங்க, நேரே
தூங்குவர் - தாங்கி ஏகத் தொன்மையில், துகளிலோரே. 93

குறிப்பிடம், காலம், திக்கு, ஆசனம், கொள்கை, குலம், குணம், சீர்,
சிறப்புறு விரதம், சீலம், தபம், செபம், தியானம், எல்லாம்
மறுத்து அற ஒழிதல் செய்தல் மருவிடா; மன்னு செய்தி,
உறக்கு உறுபவர் போல், வாய்மை ஒழிந்தவை ஒழிது போமே. 94

அகம் புறம் என்று இரண்டால் அர்ச்சனை புரியும் இந்தச்
சகம்தனில், இரண்டும் இன்றித் தமோ மயமாகி எல்லாம்
நிகழ்ந்திட, மகிழ்ந்து வாழும் நீர்மையார் போல, ஞானம்
திகழ்ந்து அகம் புறம் எனாத செம்மையார் நன்மையாரே. 95

அண்டம் மேவிட அனைத்தும், அனைத்தையும் அண்டம் மேவிக்
கொண்டல் போல், எவையும் ஞானக் குறைவிலா நிறைதலாலே,
கண்டதோர் பொருளை அந்தக் கருத்தினால் காணில், தானே
அண்ட நாயகனார் மேனி; ஆனதேல் ஐயம் இன்றே. 96

மண் முதல் கரணம் எல்லாம் மறு அசத்து ஆக்கி, ஞானக்
கண்ணினில் ஊன்றி, அந்தக் கருத்தினால் எவையும் நோக்கி,
எண்ணி அஞ்சு எழுத்தும் மாறி, இறை நிறைவு உணர்ந்து போற்றல்,
புண்ணியன் தனக்கு ஞான பூசையாய்ப் புகலும் அன்றே. 97

தொண்டர்கள் தாமும், வானோர் தொழும் திருமேனி தானும்,
அண்டரும் கண்டிலாத அண்ணலே என வணங்கி,
வெண் தரளங்கள் சிந்த - விழி, மொழிகுளற, மெய்யே
கண்டு கொண்டு இருப்பர் - ஞானக் கடல் அமுது அருந்தினோரே. 98

8. நூல் கருத்து

நிலவு உலோகாயத ஆதி நிகழ் சிவாத்துவித அந்தத்துள்
குலவினர் அளவு அளாவாக் கொள்கையதாகி, வேதத்
தலை தரு பொருளாய், இன்பாய், தாவு இல் சற்காரியத்தாய்,
மலைவு அறும் உணர்வால், பெத்த முத்திகளை மதித்தாம் அன்றே. 99

9. நூல் உபதேசிக்கும் முறை

திருவருள் கொடுத்து, மற்று இச் சிவப்பிரகாச நல் நூல்
விரிவது தெளியும் ஆற்றால், விளம்பிய ஏது நோக்கி,
பெருகிய உவமை நான்கின் பெற்றியில் நிறுவி, பின் - முன்
தரும் மலைவு ஒழிய, கொள்வோன் தன்வயின் சாற்றலாமே. 100

உமாபதியார் வணக்கப் பாடல்கள்

இப் பிறப்பே சீவன் முத்தி எய்துவிக்கும் மேல் பிறக்கும்
அப் பிறப்பும் இங்கே அறுத்தருளி - ஒப்பறவே
உண்மை அருள் கொற்றங்குடி வாழ் உமாபதிதன்
வண்மை அருட்கு உண்டோ கைம்மாறு.

கற்றவன் கருணை கூரக் கலந்து உயிர் சிவமாய் வாழப்
பற்றவன் பரமே யாகப் பரிவினால் சிவப்ரகாசம்
சொற்றவன் பொருள் சுபாவந் துலக்கிய தூயன் தொல்லோன்
கொற்றவன் குடியான் நந்தம் குலமுழுது ஆண்ட கோவே.

ஓர் அறிவாதி ஐந்தறி-உயிர்க்கும்
உண்மையாம் சிவானந்தப் பொருளை
ஒருமைய தாக அனுபவ விருப்பம்
உள்ளத்தில் உணர்த்திய வினையும்
வேரறக் களைந்து வீடு அளித்து உதவும்
விமல நல் தேசிக வடிவாய்
விண்ணவர் போற்றும் அண்ணல் எப்போதும்
வியாபகன் ஆகி நித்தியனாய்ப்

பாரினில் சிறந்த வெண்ணெய் நல்லூரில்
பரந்து எழு மெய்கண்ட தேவன்
பரம்பரை அதற்குத் தீபமாய் விளங்கும்
பர·சிவசாட் குண்ணிய ரூபன்·

கார் செறி சோலைக் கொற்றவன் குடியில்
கனக சிங்காதனத்து அமர்ந்த
கருணையின் வடிவாம் உமாபதி சிவன்பொன்
கழல் இணை இறைஞ்சி வாழ்த்திடுவாம்.

உரைநடையில் சிவப்பிரகாசம்

காப்பு

இன்ப அன்புருவாகிய விநாயகக் கடவுள் தம்மை வழிபடும் அடியவர்களுக்குத் தமது கிரியா சத்தியினால் வினையை நீக்கி, ஞான சத்தியினால் ஆணவ மலத்தை ஒழித்து, ஞான ஒளியினை உண்டாக்கியருளுவர்.

I. பொது அதிகாரம்

1. பாயிரம்

1. பேரொளியாய், திருவருளே வடிவமாகக்கொண்டு, சடையிலே கொன்றை மாலை முதலியன அணிந்து, ஆன்மாக்களின் பிறவித் துயர் நீங்கும் பொருட்டுச் சிற்றம்பலத்தின்கண்ணே நடனம் செய்யும் நடராசப் பெருமானது திருவடிகளை எம்முடைய தலைமீதும் அறிவிலும் பொருந்தும்படி வணங்குவோம்.

2 பரை ஆதி இச்சை ஞானம் கிரியை என நின்று, ஆன்மாக்களுக்குப் பரபோக ரூபத்தைக் கொடுத்தருளும் திருவருளே திருமேனியாகக் கொண்டு, விந்து மோகினி மான் என்னும் மாயைகளைப் பொருந்திக் காரியப்படுத்தி, இவ்வாறு

எல்லாமாகியும் தான் ஒன்றேயாய், மல மாயைகளில் பொருந்தாது சுத்தமாய், பரமசிவனது பஞ்ச கிருத்தியங்களுக்குத் தானே காரணமாய், உலகத்துள் உயிர்களது பிறவித் துன்பம் ஒழியும்படி பொன்னம்பலத்திலே ஆனந்த நடம் செய்தருளும் நடராசப் பெருமானது திருநடனத்தைக் கண்டருளுகின்ற சிவகாமியம்மையாரது திருவருள் வடிவான திருவடித் தாமரை மலர்களைத் தலையின்மேல் வைத்து வணங்குவோம்.

3. இந்நூல் படிப்போர்க்கு நற்பயன் கொடுத்தலையும், குற்றம் பற்றாமையையும், இடையூறு நண்ணாமையயுங் கருதி விநாயகக் கடவுளுடைய திருவடிகளை வணங்குவோம்.

4. முருகக் கடவுள் தேவர்களுக்குச் சேனாபதி, ஞான மதலை, அகத்தியருக்கு வேதத்தினுட் பொருளை உபதேசித்த குரவன், வள்ளி நாயகியாருக்கு அருள் செய்தவர். அவரது திருவடிகள் இரண்டினையும் சிந்திப்பாம்.

5. நந்திதேவர் முதல் மறைஞான சம்பந்தர் ஈறாகிய சந்தான குரவர் எழுவரையும் வணங்குவோம்.

6. பூவுலகு விளக்கமுறவும், சாமவேதம் பொலிவு பெறவும், பராசர முனிவருடைய கோத்திரம் தழைக்கவும், எம்போல்வாருக்கு ஞானப் பற்றுக்கோடு தரவும் தோன்றி எம்மை அடிமையாகக் கொண்ட சைவ சிந்தாமணியாம் மறைஞானசம்பந்தன் என்னும் எமது தந்தையுடைய திருவடிகளை வணங்குவோம்.

7. புறச்சமயத்தவரால் ஒருவகையாலும் உணரப்படாததும், அகச்சமயத்தவரால் பொதுவியல்பு மாத்திரையின் உணரப்படுவதும், அபேதம் பேதம் பேதா பேதம் என்னும் இயல்புகளின்றி, உடலும் - உயிரும், கண்ணும் - ஆதித்தனும், கண்ணொளியும் - ஆன்மபோதமும் போலப் பிரிப்பற நிற்கும் அத்துவித இயல்பு கூறும் சிறப்பினையுடையதாய்ம், வேதாந்தமாகிய உபநிடதங்களின் முடிந்த பொருளாயுமுள்ள சைவ சித்தாந்தத்தின் உண்மையை இந்நூலில் வகுத்துரைப்பாம்.

8. ஒரு மலமுடைய விஞ்ஞான கலர், இரு மலமுடைய பிரளயாகலர், மும் மலமுடைய சகலர் என உயிர் வர்க்கம் மூவகை. இவருள், பக்குவரான சகலருக்குப் பரமசிவன் குருவாய் எழுந்தருளிவந்து, திருக்கண்நோக்கம் முதலிய எழுவகைத் தீக்கைகளால் மலங்களை நீக்கி அருளுவர். அவுத்திரிதீக்கை, ஞானவதி கிரியாவதி என இரு வகையாம்.

9. சமயதீக்கை மந்திர உச்சாரணைக்கு அதிகாரத்தையும், விசேட தீக்கை மந்திரம், சிவபூசை, யோகம் என்னும் மூன்றுக்கும் அதிகாரத்தையும் கொடுக்கும். நிருவாண தீக்கையினால் ஆறு அத்துவாக்களும் நீங்கப்பெற்று ஆன்மா சிவகதி அடையும்.

10. சரியை கிரியை யோக வழிபாடுகளெல்லாம் ஞானமுண்டாதற்குக் காரணமாயிருக்கும். இவை மூன்றிற்கும் பயன் சாலோக சாமீப சாரூப பதமுத்திகளைப் பெறுதலாம். ஞானம், பரஞானம், அபர ஞானம் என இரண்டாம். பரஞானம் ஆன்மாவின் மலவிருளைப் போக்கும் திருவருளாம்.

அபரஞானம் அத்திருவருளை அறிவிக்கும் சிவாகமங்களாம்.

11. மெய்கண்டதேவர் சிவஞான போதத்தை அருளிச் செய்தார். அவருடைய சீடரான அருணந்தி சிவாசாரியர் சிவஞான சித்தியை விரித்துக் கூறினர். அவர்களுடைய திருவடிகளைத் துதித்து அவ்விரு நூல்களையும் ஆராய்ந்து பார்த்து, சிவாகமங்களின் பொருளையும், எனது மெய்யுணர்வையும் சேர்த்து, சிவப்பிரகாசம் என்னும் நூலைப் பொது என்றும் உண்மை என்றும் வகுத்து நூறு விருத்தங்களால் சொல்வேன்.

12. பழைய நூல்கள் எவையும் நல்லனவல்ல. புதிய நூல்கள் எவையுந் தீயனவல்ல. உத்தமராவார் இந்நூலில் மிகுந்திருக்குஞ் சொற் குற்றம் முதலியவைகளை விலக்கிவிட்டுப் பொருள் உண்மையை அங்கீகரிப்பர். மத்திமராயுள்ளோர் இந்நூலையும் சுருங்கச் சொல்லல் முதலிய அழகுகள் அமைத்திருத்தலை நோக்கி அங்கீகரிப்பர். பொருளில் குற்றமும் குணமும் பொருந்தியிருத்தலை ஆராய்ந்தறியும் வன்மையில்லாத அதமர்கள் இந்நூலைப் பலரும் புகழ்ந்தால் தாமும் புகழ்ந்தேத்துவர். அந்நியர்கூடி இகழ்ந்தால், தாமும் இகழ்ந்துரைப்பர். இவர் தமக்னெ ஓரறிவில்லாதவர்.

2. பதி இலக்கணம்

13. பதியாகிய சிவம் உண்மை அறிவு இன்பாய் விளங்குவது என்று அதனது உண்மை இலக்கணத்தை உணர்த்தியது.

14. தன்னிடத்து அநாதியே பிரிப்பின்றி விளங்கும் பராசத்தி இச்சா ஞானக் கிரியைகளாக வியாபரிக்க, அவைகளை நின்மலனாகிய சிவன் பொருந்தித் திருவருளே திருமேனியாகக் கொண்டு, நாதம் விந்து முதலிய தத்துவங்கள் தோற்றுகின்ற சுத்த மாயையைப் பொருந்தி, வேதம், ஆகமம் முதலிய பலகலைகளை அருளிச்செய்து, அநந்த தேவரை அதிட்டித்து அசுத்தமாயையிற்படும் தநு கரண புவன போகங்களையும் சீகண்டரை அதிட்டித்துப் பிரகிருதி மாயையிற்படும் தநு கரண புவன போகங்களையும் படைத்து நிறுத்தி ஒடுக்குவன். இத்தொழில்களைச் செய்யும் திருமேனிகள் நிஷ்களம், நிஷ்கள சகளம், சகளம் என முத்திறப்படும்.

15. பரமசிவன் சுட்டி அறியப்படும் பொருளுக்கெல்லாம் அப்பாற்பட்டிருக்கும் இயல்புடையனாய்த் தோற்றம், நிலை இறுதிகளும் இல்லாத சத்துப் பொருளாயுள்ளவன்; ஞான வடிவினன்; தன்னியல்பு பிறரால் அறிதற்கரிய அதிசூக்கும சித்தாயிருப்பவன்; விருப்பு வெறுப்புக்களில்லாத இன்ப வடிவினன்; ஆன்மாக்களுக்கெல்லாம் பரமான்மாவாயுள்ளவன்; இங்ஙனம் அசத்தும், தூலசித்துமாகிய பசு பாசங்களினின்றும் வேறுபட்ட இயல்புடைய சச்சிதாநந்த சொரூபியாய் நிற்றலின், ஐந்தொழிலும் செய்யுமிடத்துத் தான் நினைந்ததொரு வடிவத்தைத் தானே நிறுத்திக் கொள்வன்.

16. உலகங்களெல்லாம் ஆண் பெண் அலி என்னும் அவயவப் பகுப்புடையன வாய்த் தோன்றி நின்று ஒரு கால எல்லையில் ஒடுங்கும் தன்மையுடையன.

ஒடுங்கிய உலகம் ஒடுங்கியவாறு நில்லாது மீளவும் உதிக்கும். பின் உதிப்பது ஆன்மாக்களைப் பந்தித்த ஆணவ மலம் நீங்கும்பொருட்டாம்.

ஆன்மாக்கள், எடுக்கும் தேகங்கள் நல்வினை, தீவினைகளுக்கேற்றபடி மாறி மாறித் தோன்றுவதும், அழிவதும் சுவர்க்க நரகங்களில் செல்வது மாயிருத்தலானும், அத் தேகங்களை மாயை தருமென்னில், மாயை செயலற்ற சடமாயிருத்தலானும், ஆன்மாக்களே அத் தேகங்களை எடுக்குமென்னில், தேகங்களொடு முன்னுள்ள கேவல நிலையில் அவ்வான்மாக்களுக்கு அறிவில்லாமையானும், தேகம் ஒரு சேதனனுடைய தொழிலை வேண்டி நிற்றலானும், நின்மலனாகிய சிவனே அநாதி முத்த சித்துருவாய் நிலை பெற்று நின்று தநு, கரண, புவன போக வடிவாயுள்ள உலகங்களெல்லா வற்றையும் தோற்றுவிப்பன்.

17. உலகங்களைப் பிரமன் படைப்பன், விட்டுணு காப்பன், சிவனே ஒடுக்குவன். ஆதலால், பிரமன், விட்டுணு இருவரும், அச்சிவனுடைய மேலான அதிகாரத்தின் வழியே நிற்பவராவர். படைத்தல், காத்தலாகிய தன்தொழிலையே அவரிடத்துச் சிவன் நிறுத்துவன். அச்சிவன் தனது சந்நிதானத்தின் சத்தியின் செயலால் அந்த முத்தொழிலும் நடைபெறச் செய்வன். அம்முத்தொழிலுடைமைபற்றி அவன் விகாரமடையமாட்டான்.

18. ஐந்தொழிலையும் பரமசிவனது திருவருளின் திருவிளையாட்டென்று சொல்லுவர். அன்றி, ஆன்மாக்களைத் துன்ப காரணமான செனன மரண

சாகரத்தினின்றும் எடுத்து அருள் புரிதல் காரணமாம் என்றும் கூறுவர். அருள் புரிதல் காரணமென்பது எவ்வாறெனின், அழித்தல் ஆன்மாக்களின் இளைப்பொழித்தற்பொருட்டாம். படைத்தல் மலமரிபாகம் வருவித்தற்பொருட்டாம். காத்தல் வினைப் போகங்களை உண்பித்து வினைகளை ஒழித்தற்பொருட்டாம். மறைத்தல் அவ்வினைப் போகங்களில் அழுந்தச் செய்தலாம். அருளல் உயிர்களுக்கு மலத்தை நீக்கிச் சிவத்துவத்தை அளித்தலாய அருளேயாம். ஆதலால் இந்த அருள் மாத்திரமன்றிப் படைத்தல் முதலியவைகளும் அருட்டொழில்களேயாம்.

3. பசு இலக்கணம்

19. ஆன்மாக்கள் எண்ணில்லாதனவாய், என்றுமுள்ளதாய் ஆணவமல இருளில் அழுந்தி, நல்வினை, தீவினைகளுக்கீடான உடல்களைக் கடவுள் அருளால் பெற்று, அந்த உடல்கள் வாயிலாக இருவினைப் போகங்களை அருந்தும்பொழுது அவை வினை வயத்தால் வருகின்றன என்று உணராமல் தமது செயலால் வருகின்றன என்று கருதி, அக்கருத்துவகைபற்றி மீட்டும் இன்பத் துன்பம் வாயிலாகப் புண்ணிய பாவங்களைச் செய்து, அவ்வினைகளுக்கு ஏற்றபடி சுவர்க்கம், நரகம், பூமி என்னும் இடங்களில் போக்குவரவு உடையனவாய்ப் பிறவிச் சுழலிற்பட்டு உழலும். அப்படி உழன்று திரியும்பொழுது ஆணவ மலமானது பரிபாகமடைய, அக்காலத்தில்

குருவருளால் அறிவிலே ஞானம் பிரகாசமாம். அந்த ஞானத்தினால் மலவிருளை நீக்கிச் சிவத்தினது திருவடி நீழலை அடையும்.

4. பாச இலக்கணம்

20. ஆணவ மலமானது ஒன்றாய், தத்தம் பரிபாக காலத்தில் நீங்கும் எண்ணிறந்த சத்திகளையுடையதாய், பேரிருளாய் நின்று அஞ்ஞானத்தை விளைவிப்பதாய், ஆன்மாக்களோடு அநாதியே சகசமாய் நிற்பதாய், அழிவில்லாததாய் எல்லாக் கேடுகளுக்கும் காரணமான மூல மலமாய், ஆன்மாக்களின் அறிவு தொழில் முழுவதையும் விளங்கவொட்டாது தடுத்து நிற்கும் இயல்பினதாம்.

திரோதான சத்தியானது அந்த ஆணவ மலம் பரிபாகமடையும்படி உடன் நின்று அதனைக் காரியப்படுத்தும். அதனால், அத்திரோதான சத்தியும் மலம் என்று உபசரித்துச் சொல்லப்படும். ஆணவ மலம் பரிபாகமானபின் அச்சத்தியே அருட்சத்தியாய் மாறிச் சிவபெருமானது திருவடிகளை அடையும்படி திருவருள் புரியும்.

21. பரமசிவனது சத்தியின் வியாபகத்தால் சுத்த மாயையிலே நாதம் தோன்றும். நாதத்தில் விந்து தோன்றும். விந்துவில் சாதாக்கியம் தோன்றும். சாதாக்கியத்தில் மகேசுவரம் தோன்றும். மகேசுவரத்தில் சுத்த வித்தை தோன்றும். இத்தத்துவங்கள் ஐந்தினையும் அதிட்டித்து நிற்கும். சிவம் முறையே சிவம் சத்தி சதாசிவன் மகேசுவரன் சுத்த வித்தை எனப் பெயர்

பெற்று நிற்கும். அன்றி, முன்சொன்ன விந்துவினின்று சூக்குமை பைசந்தி மத்திமை வைகரி என்னும் வாக்குகள் நான்கும் தோன்றும்.

22. அசுத்த மாயையானது காரியப்பாட்டிலே தநு கரண புவன போகம் என்னும் நால்வகைப் பொருள்களாய் ஒன்றுக்கொன்றொவ்வாத தூல சூக்கும இயல்பினையுடைய தத்துவங்களாய், காரண ரூபத்தில் நித்தமாய் ஒன்றாய், எப்பொழுதும் அருவமாயிருப்பதாய், கன்மம் நீங்குமளவும் ஆன்மாக்களுக்கு மயக்கம் செய்வதாய், சடமாய், அசலமாய் தன்னிடத்திருந்து விரிந்த காரியங்களனைத்திலும் வியாபித்து நிற்பதாய், அக்காரியங்கள் யாவும் தோன்றிய முறையில் வந்து ஒடுங்க, அவை ஒடுங்குமிடமாய், அவ்வொடுக்கமாகிய சங்கார காலத்து ஆன்மாக்களெல்லாம் வந்து பொருந்துமிடமாய், மும்மலங் களுள் ஒன்றாய், திரோதான சத்தியால் காரியப்படுத்தப்படுவதாயிருக்கும்.

23. உலகத் தோற்ற ஒடுக்கங்களுக்குப் பிரமம் முதற் காரணமாக மாட்டாது. மாயையே முதற் காரணம். அம்மாயை முதல்வனாலே தநுவாதிகளாகக் காரியப்படும்.

24. கடவுள் உலகத்தைப் படைக்கும் காலத்து யாவரையும் ஒரு தன்மையாகப் படையாமல், பறவை முதலிய எழுவகைப் பிறப்பாகப் பலபடப் படைத்த காரணமென்னையெனின், அது முற்பிறவிகளிலே செய்த நல்வினை தீவினைகளுக்கேற்றபடியாம்.

வினையே பிறவிகளைத் தருமெனின், கடவுள் வேண்டப்படுவது எதன் பொருட்டெனில், வினை அறிவில்லாத சடமாம். ஆதலின் பறவை முதலிய படைப்புகள் அவரவர் செய்த வினைக்கேற்ப முதல்வன் உயிர்களுக்கு விதித்தனவாகும்.

இனி, முன் செய்த வினையையும், அதற்கேற்ற உடம்பையும் அடைவது உயிராயின், அவ்வுயிர்களே தத்தம் வினைகளுக்குத் தக்க உடல்களை எடுத்துக்கொள்ளும். அதற்குக் கடவுள் வேண்டுவதில்லையெனின், சடமாகிய வினையும், மாயா காரியங்களும், தனக்கென ஒரு செயலும் அறிவும் இல்லாத உயிரும் தம்முள் கூடுவதற்கு வேறோர் ஏதுவுமில்லை. ஆதலால், கடவுளே அவைகளைக் கூட்டுவர் என்பதாம்.

25. ஆணவம் கன்மம் மாயை மூன்றும் நெல்லினிடத்துள்ள உமியும் முளையும் தவிடும்போல ஆன்மாவோடு அநாதியாய் உள்ளனவாம்.

26. அசுத்த மாயையிலிருந்து கலை காலம் நியதியும், கலையிலிருந்து வித்தை அராகம் மூலப் பிரகிருதி என்பவனவும் தோன்றும். பிரகிருதியிலிருந்து குண தத்துவமும், அதிலிருந்து புத்தியும், அப்புத்தியில் அகங்காரமுந் தோன்றும். அவ்வகங்காரம் தைசத வகங்காரம் வைகாரி யகங்காரம் பூதாதி யகங்காரம் என மூவகையாம். அவற்றுள், தைசத அகங்காரத்திலிருந்து சாத்துவிக குண சம்பந்தமான மனமும், செவி முதலிய ஞானேந்திரியம் ஐந்தும் தோன்றும்.

27. வைகாரி அகங்காரத்திலிருந்து இராசத குண சம்பந்தமான வாக்காதி கன்மேந்திரியம் ஐந்தும் தோன்றும். பூதாதி அகங்காரத்திலிருந்து தாமத குண சம்பந்தமான சத்தாதி தன்மாத்திரைகள் ஐந்தும் தோன்றும். அப்பஞ்ச தன் மாத்திரைகளுள், சத்தத்திலிருந்து ஆகாயமும், பரிசத்திலிருந்து வாயுவும், உருவத்திலிருந்து தேயுவும், இரதத்திலிருந்து அப்புவும், சத்தத்திலிருந்து பிருதிவியும் தோன்றும்.

அப்பூதங்களில் ஆகாயமானது சத்தம் என்னும் ஒரு குணத்தையும், வாயு சத்தம் பரிசம் என்னும் இரண்டு குணங்களையும், தேயு சத்தம் பரிசம் உருவம் என்னும் மூன்று குணங்களையும், அப்பு சத்தம் பரிசம் உருவம் இரதம் என்னும் நான்கு குணங்களையும், பிருதிவி சத்தம் பரிசம் உருவம் இரதம் கந்தம் என்னும் ஐந்து குணைங்களையும் வியத்தமாகப் பெற்று விளங்கும்.

இந்த ஆகாயம் முதலிய பஞ்ச பூதங்களுக்கும் முறையே சதாசிவன் மகேசுவரன் உருத்திரன் விட்டுணு பிரமா என்னும் ஐவரும் அதி தேவதைகளாம்.

இத் தத்துவங்கள் ஒடுங்கும் காலத்துத் தோன்றிய முறையிலொடுங்கும்.

28. கன்ம மலமானது ஆன்மாக்களெடுக்கும் உடம்புகளுக்குக் காரணமாய் பலவிதமான போகங்களைத் தருவதாயிருக்கும். அக் கன்மம் பிரவாகா நாதியாய், பல பேதங்களாய், ஆன்மாவை விட்டு நீங்காததாய், மனம் வாக்குக் காயங்களால் செய்யப்படுவதாய், புத்தி தத்துவம் பற்றுக்கோடாயிருப்பதாய்,

இன்பமும், துன்பமுமாகிய பயனைத் தரும் புண்ணிய பாவ வடிவாயிருப்பதாய், சங்கார காலத்திலே மாயையைப் பொருந்துவதாயிருக்கும்.

29. கன்மத்தின் பயன் சாதி, ஆயுள், போகம் என மூன்று விதமாய் வரும். இவை ஆன்மாவில் கூடி வருதல் பழவினையினாலாம். ஊழ் அல்லாத வேறொன்றும் ஆன்மாவுக்கு அனுபவமாய் வரமாட்டாது. கன்மத்தின் பயன் செய்த முறைமையினன்றிப் பக்குவமான முறையில் முன் செய்தன பின்னும் பின் செய்தன முன்னுமாக மாறி வரும். இயல்பாக வருகின்ற தெய்விகத்தாலும், ஆதி பௌதிகம் ஆத்தியான்மிகங்களாகிய அசேதன சேதனங்கள் வாயிலாகவும் வரும். இப்பிறவியில் ஆன்மா அனுபவிக்கும் இன்பத் துன்பங்களுக்குக் காரணம் முற்பிறவியில் செய்த ஊழ்வினையாம்.

30. இப்பிறவியில் வருவனவெல்லாம் முற்பிறவில் செய்த ஊழ்வினையின் பயனாயின், இனிவரும் பிறவிக்கு ஏதுவான ஆகாமியம் விளைவது எப்படி யெனில், அவ்வினைப்பயனை நுகருங் காலத்து அதில் ·வைத்த விருப்பு வெறுப்புகளால் ஆகாமியம் உண்டாம். அவ்விருப்பு வெறுப்பும் ஊழ் வினை யின் பயனன்றோவெனின், அவைகளை ஊழின் பயனென்று உணராமல் நான் செய்கின்றேன், நான் அனுபவிக்கின்றேன் என்னும் முனைப் போடு விரும்பி வெறுத்து இதம் அகிதங்களைச் செய்து அனுபவித்தலால், நான் என்னும் முனைப்பின் பயன் அக் கருத்து வகையால் ஆகாமியமாய் வந்தேறும்.

அவ்வினைகள் புத்திபூருவம் அபுத்திபூருவம் என இரு திறப்படும். அவையும் புத்திபூருவ நல்வினை தீவினை, அபுத்திபூருவ நல்வினை தீவினை என ஒவ்வொன்று இவ்விரண்டாய் நான்கு வகைப்பட்டு, பொதுவகையால் புண்ணிய பாவங்களென நின்று உயிர்களை விடாது பொருந்தும்.

31. நல்வினை, தீவினைகள் மனம் வாக்குக் காயங்களால் வருவனவாம். நல்வினையால் தீவினையும், தீவினையால் நல்வினையும் அழிய மாட்டாது. இவ்விரண்டு வினைகளும், அனுபவித்தே ஒழிய வேண்டும். ஆயினும், வேதாகமங்களின் கன்ம காண்ட முறைப்படி கழுவாய் செய்தால் தீவினை நீங்கும். அக் கழுவாய் பொருள் கொடுத்து மற்றவர்களைக் கொண்டு செய்வித்தலுமாம். ஒரு கழுவாய் செய்யாது வேதாகமங்களின் ஞானகாண்ட முறைப்படி நடந்துவரின், அதிகப் பற்றான பாவங்கள் நீங்கும். நீங்காதன மேலும் பிறவிகளை உண்டாக்கும்.

32. ஆணவம், திரோதாயி, மாயை, கன்மம் மாயேயம் என மலம் ஐந்து. இந்த ஐந்து மலமும் நீங்கினாலன்றித் திருவருளைப் பெறுதல் ஏலாதாம்.

5. அவத்தை இலக்கணம்

33. ஆன்மாக்கள் கேவலம் சகலம் சுத்தம் என மூன்று அவத்தை உறுவர். அவற்றுள், கேவலமாவது கலை முதலிய தத்துவங்களும், பர சூக்கும தூல உடம்புகளுமின்றி, ஆணவ மலம் ஒன்றேயன்றி வேறொரு

பொருளுமில்லையெனும் இயல்பினையுடையதாய், அந்தக் கரணம் முதலிய அறிகருவிகளின்மையால் ஒன்றையும் அறியவியலாததாய், மலவிருளில் அழுந்தி அதைவிட்டு நீங்கும் வாயில் இல்லாமலும், பிறப்பிறப்பும் ஏகதேசத் தன்மையுமின்றி அம்மலத்தோடு மாத்திரம் கூடியிருக்கும் நிலையாம்.

34. ஐக்கியவாத சைவர், ஆணவமலம் என்பதொன்றில்லை; மாயையுங் கன்முமாகிய இரு மலமேயுள்ளன; கடவுள் ஆன்மாக்கள் முன் செய்த நல்வினை தீவினைகளுக்கேற்றபடி தநு கரண புவன போகங்களைக் கொடுப்பர்; அவைகளைக் கொண்டு ஆன்மாக்கள் இன்பத்துன்பங்களை அனுபவிப்பர்; இப்படி எல்லாக் கன்மங்களும் துலைபுகு பொருள்போல நேரொத்த பொழுது கடவுள் குருமூர்த்தியாய் எழுந்தருளித் திருவருள் புரிந்து அக்கன்மங்கள் எல்லாவற்றையும் நீக்கியருளுவர்; அவர் செய்யும் தீக்கையினால் மாயை கன்மங்கள் வந்து பொருந்தா; அந்நிலையில் ஆன்மாக்களுக்கு முன்புள்ள பேரறிவே வெளிப்பட்டுத் தோன்ற ஆன்மா தன்னறிவையே தான் பெற்றுப் பேரறிவாளனாம் என்பர்.

35. அப்படியாயின், மாயை கன்மம் என்னும் இரண்டனுள், மாயையோ, கன்மமோ ஆன்மாவை முந்திப் பொருந்தியது? அன்றியும், முன் சுத்தமாயிருந்த ஆன்மாவுக்கு அம் மாயை கன்மங்கள் வரக் காரண மென்னை? அப்படி வருதல் அவற்றின் இயல்பென்னில், முத்தியடைந்த பின்னும் வருமெனப்பட்டு முத்தியென்பதொன்று இல்லையாய் முடியும். இவை நிற்க,

கலை முதலிய தத்துவங்கள் ஆன்மாவைப் பொருந்திய பின் தம்மறிவையே ஆன்ம சொரூபம் விளங்காதபடி மறைத்துப் பிரபஞ்சத்தையே காட்டி நிற்குமென்னில், மிக நன்று; கலை முதலிய தத்துவங்கள் நீங்கிய துரியாதீதத்தில் ஆன்ம அறிவு விளங்காதிருத்தற்கு ஏதுவென்னை? அறியாமை என்னில், அதனையே அறிவுடையோர் ஆணவ மலம் என்பர். ஆதலால், அவ்விரு மலங்களோடு ஆணவ மலமும் உண்டென்பதே துணிபாம்.

36. சகநிலையில் தனக்கு வேறற நின்று பிரபஞ்சத்தை அறிவித்தருளும் திருவருளை ஆன்மா அறியாது. சுத்த நிலையிலே சிவமே எல்லாமாய் நிற்கும் முறைமையை அத்திருவருளைக் கொண்டறியும். சகலத்தில் ஆன்மாவோடு சகசமாய்க் கலந்து நின்று திருவருளை அறியாதபடி செய்வது ஆணவ மலமாம். மாயை கன்மங்கள் சகலத்தில் சேர்வதும், கேவலத்தில் நீங்குவதுமாயிருக்கும். ஆணவ மலம் சகல கேவலங்கள் இரண்டிலும் நீங்காதிருக்கும். ஆதலால், அத் திருவருள் பிரகாசமான சுத்த நிலையிலன்றி ஆணவ மலம் உண்டென்பதை அறிய இயலாது.

37. ஆணவ மல மறைப்பை நீக்குதற்பொருட்டுத் திருவருளால் வாக்குகளும் கலை முதலிய தத்துவங்களும் ஆன்மாவைப் பொருந்தும். இவற்றால், ஆன்ம அறிவு விளங்கப்பெறும். இவற்றைக் கூட்டி அறிவைத் தருகின்ற திருவருளை ஆன்மாக்கள் அறிந்து பொருந்தாதபடி ஆணவ மலம் மறைக்கும். மல மாயை களின் இயல்பு இருளும் ஒளியும்போல மாறுபட்ட தன்மையாக இருக்கும்.

இனி, ஆன்ம அறிவு விளங்கும் வகையும், அம் மாயா காரியங்களின் செயலும் - மூலாதாரத்திலே விளங்கும் விந்துவிலிருந்து சூக்குமை வாக்குத் தோன்றும். அது ஞான மாத்திரைக்கு ஏதுவாகியும் பிரகாசமாயுமிருக்கும்.

38. அந்தச் சூக்குமை வாக்கு உந்தித் தானத்தை அடைந்து மயில் முட்டையில் நீர்போல அக்கரங்கள் வேறு வேறாகப் பிரிந்து தோன்றும் முறைமை பொருந்த ஒடுக்கிச் சிந்தையிலே நிருவிகற்ப உணர்வுக்கு ஏதுவாய் நிற்கும். அப்பொழுது அது பைசந்தி எனப்படும்.

பின்பு அந்த வாக்கு, உதான வாயுவின் தொழிற்பாட்டால் அக்கரங்கள் பிரிந்து தோன்ற, பிறர் செவிக்குக் கேளாமல் உள்ளடங்கிய உச்சரிப்பாயும் மெல்லோசையாயும் கண்டத்திலே தொனிக்கும். அந்நிலையில் அது மத்திமை எனப்படும்.

பின்பு அந்த வாக்கு, மனத்து நினைந்தொரு பொருளைச் சொல்லும் தன் செவிக்கும், கேட்கும் பிறர் செவிக்கும் கேட்கும் சொல்லாய், சொல்பவனுக்கும் கேட்பவனுக்கும் சவிகற்ப உணர்வு உண்டாதற்கு ஏதுவாய் நிற்கும். அந்நிலையில் அது வைகரி எனப்படும்.

39. நான்கு வாக்குகளினாலும் சுத்த வித்தை முதலிய தத்துவ கர்த்தாக்கள் ஐவராலும் ஆன்மா அறியும் அறிவுக்குத் தக்கபடி அவ்வான்மாவுக்கு விடய ஞானம் உண்டாகும். கலா தத்துவம் ஆணவ மலத்தைச் சிறிதே நீக்கி ஆன்மாவின் கிரியா சத்தியை விளக்கி விடய போகங்களில் செலுத்தி நிற்கும்.

வித்தை ஆன்மாவின் ஞான சத்தியை விளக்கி அப்போகங்களில் செலுத்தி நிற்கும்.

40. அராகம் வினைக்கேற்ப வரும் போகங்களில் இச்சையை மிகுவிக்கும். நியதி தத்துவம் அவரவர் செய்த கன்மங்களை அவரவரே அனுபவிக்கும்படி நிச்சயம் செய்து நிறுத்தும். அதன்பின் காலமானது உயிர்கள் போகங்களை நுகரும்பொழுது இறந்த காலம் நிகழ்காலம் எதிர்காலம் என முத்திறப்பட்டு நின்று இறந்த காலத்து எல்லையையும், நிகழ்காலத்துப் பலத்தையும் எதிர்காலத்துப் புதுமையையும் வரையறை செய்து நிற்கும்.

41. கலை முதலிய ஐந்து தத்துவங்களினால் பந்திக்கப்பட்டுப் போகங்களில் உன்முகமாய் ஆன்மா நிற்கும்பொழுது, அவ்வான்மா புருட தத்துவம் எனப் பெயர் பெறும். கலா சுத்தி செய்யுமிடத்து, இப் புருட தத்துவத்திற்கும் சுத்தி செய்யப்படும்.

பிரகிருதி, சாத்துவிகம் இராசதம் தாமதம் என மூன்று குணங்களாகப் பிரியும். அந்த மூன்று குணங்களும் தனித்தனி வேறு இரண்டு குணங்களைப் பொருந்தும்.

42. முக்குணங்களுள் சாத்துவிகமானது பிரகாசம் இலகுதை என்னும் இரண்டு குணங்களையும், இராசதமானது வியாவிருதி அடர்ச்சி என்னும் இரண்டு குணங்களையும், தாமதமானது கௌரவம் அநியயம் என்னும் இரண்டு குணங்களையும் உடையனவாம். இந்த மூவகை ஒன்பது குணங்களும் உயிர்

ஒவ்வொன்றிலும் பொருந்தியிருக்கும். இக்குணங்களின் தொழில் :- தமோ குணம் விடயபோகங்களில் இச்சையை உண்டாக்கும்; இராசத குணம் விடயபோகங்களைப் பற்றச் செய்யும்; சாத்துவிக குணம் அப்போகங்களை அறியச் செய்யும்.

புத்தி தத்துவமானது முக்குண சொரூபமாயிருந்து இந்திரியங்கள் வாயிலாக வரும் விடயங்களைப் பகுத்துணர்ந்து நிச்சயிக்கும். அன்றியும், ஐம்பது பாவங்களையும் செய்து நிற்கும்.

43. அகங்காரமானது பிராணாதி பஞ்ச வாயுக்களையும் இயக்கி எனக்குச் சமமானவர் ஒருவருமில்லையென அகந்தைகொள்ளற்குக் காரணமாயிருக்கும். இந்திரியங்கள் வாயிலாக வந்த விடயங்களை யான் என்றும் எனது என்றும் அபிமானிக்கும்.

மனமானது இச்சையே தனக்கு வடிவாய் ஒன்றைச் சங்கற்பம் பண்ணுவதும் எப்பொழுதும் சலனப்படுவதுமாயிருக்கும்.

சித்தமானது மனம் நினைந்த பொருளிலே துணிவு பிறவாமல் இஃது யாதோ எனச் சிந்தித்துக்கொண்டிருக்கும். இச்சித்தமானது மனத்தின் தொழிலாகிய ஐயநிலையேயன்றி ஒரு தனித் தத்துவமன்று.

44. சுரோத்திரம் தொக்கு சட்சு சிங்நுவை ஆக்கிராணம் என்னும் ஐந்து ஞானேந்திரியங்களும் முறையே சத்தம் பரிசம் உருவம் இரதம் கந்தம் என்னும் விடயங்கள் ஐந்தையும் பொருந்தி அறியும்.

கலை முதலிய தத்துவங்கள் ஆன்மாவைப் பொருந்திய பின் தம்மறிவையே ஆன்ம சொரூபம் விளங்காதபடி மறைத்துப் பிரபஞ்சத்தையே காட்டி நிற்குமென்னில், மிக நன்று; கலை முதலிய தத்துவங்கள் நீங்கிய துரியாதீதத்தில் ஆன்ம அறிவு விளங்காதிருத்தற்கு ஏதுவென்னை? அறியாமை என்னில், அதனையே அறிவுடையோர் ஆணவ மலம் என்பர். ஆதலால், அவ்விரு மலங்களோடு ஆணவ மலமும் உண்டென்பதே துணிபாம்.

36. சகநிலையில் தனக்கு வேறற நின்று பிரபஞ்சத்தை அறிவித்தருளும் திருவருளை ஆன்மா அறியாது. சுத்த நிலையிலே சிவமே எல்லாமாய் நிற்கும் முறைமையை அத்திருவருளைக் கொண்டறியும். சகலத்தில் ஆன்மாவோடு சகசமாய்க் கலந்து நின்று திருவருளை அறியாதபடி செய்வது ஆணவ மலமாம். மாயை கன்மங்கள் சகலத்தில் சேர்வதும், கேவலத்தில் நீங்குவதுமாயிருக்கும். ஆணவ மலம் சகல கேவலங்கள் இரண்டிலும் நீங்காதிருக்கும். ஆதலால், அத் திருவருள் பிரகாசமான சுத்த நிலையிலன்றி ஆணவ மலம் உண்டென்பதை அறிய இயலாது.

37. ஆணவ மல மறைப்பை நீக்குதற்பொருட்டுத் திருவருளால் வாக்குகளும் கலை முதலிய தத்துவங்களும் ஆன்மாவைப் பொருந்தும். இவற்றால், ஆன்ம அறிவு விளங்கப்பெறும். இவற்றைக் கூட்டி அறிவைத் தருகின்ற திருவருளை ஆன்மாக்கள் அறிந்து பொருந்தாதபடி ஆணவ மலம் மறைக்கும். மல மாயை களின் இயல்பு இருளும் ஒளியும்போல மாறுபட்ட தன்மையாக இருக்கும்.

இனி, ஆன்ம அறிவு விளங்கும் வகையும், அம் மாயா காரியங்களின் செயலும் - மூலாதாரத்திலே விளங்கும் விந்துவிலிருந்து சூக்குமை வாக்குத் தோன்றும். அது ஞான மாத்திரைக்கு ஏதுவாகியும் பிரகாசமாயுமிருக்கும்.

38. அந்தச் சூக்குமை வாக்கு உந்தித் தானத்தை அடைந்து மயில் முட்டையில் நீர்போல அக்கரங்கள் வேறு வேறாகப் பிரிந்து தோன்றும் முறைமை பொருந்த ஒடுக்கிச் சிந்தையிலே நிருவிகற்ப உணர்வுக்கு ஏதுவாய் நிற்கும். அப்பொழுது அது பைசந்தி எனப்படும்.

பின்பு அந்த வாக்கு, உதான வாயுவின் தொழிற்பாட்டால் அக்கரங்கள் பிரிந்து தோன்ற, பிறர் செவிக்குக் கேளாமல் உள்ளடங்கிய உச்சரிப்பாயும் மெல்லோசையாயும் கண்டத்திலே தொனிக்கும். அந்நிலையில் அது மத்திமை எனப்படும்.

பின்பு அந்த வாக்கு, மனத்து நினைந்தொரு பொருளைச் சொல்லும் தன் செவிக்கும், கேட்கும் பிறர் செவிக்கும் கேட்கும் சொல்லாய், சொல்பவனுக்கும் கேட்பவனுக்கும் சவிகற்ப உணர்வு உண்டாதற்கு ஏதுவாய் நிற்கும். அந்நிலையில் அது வைகரி எனப்படும்.

39. நான்கு வாக்குகளினாலும் சுத்த வித்தை முதலிய தத்துவ கர்த்தாக்கள் ஐவராலும் ஆன்மா அறியும் அறிவுக்குத் தக்கபடி அவ்வான்மாவுக்கு விடய ஞானம் உண்டாகும். கலா தத்துவம் ஆணவ மலத்தைச் சிறிதே நீக்கி ஆன்மாவின் கிரியா சத்தியை விளக்கி விடய போகங்களில் செலுத்தி நிற்கும்.

வித்தை ஆன்மாவின் ஞான சத்தியை விளக்கி அப்போகங்களில் செலுத்தி நிற்கும்.

40. அராகம் வினைக்கேற்ப வரும் போகங்களில் இச்சையை மிகுவிக்கும். நியதி தத்துவம் அவரவர் செய்த கன்மங்களை அவரவரே அனுபவிக்கும்படி நிச்சயம் செய்து நிறுத்தும். அதன்பின் காலமானது உயிர்கள் போகங்களை நுகரும்பொழுது இறந்த காலம் நிகழ்காலம் எதிர்காலம் என முத்திறப்பட்டு நின்று இறந்த காலத்து எல்லையையும், நிகழ்காலத்துப் பலத்தையும் எதிர்காலத்துப் புதுமையையும் வரையறை செய்து நிற்கும்.

41. கலை முதலிய ஐந்து தத்துவங்களினால் பந்திக்கப்பட்டுப் போகங்களில் உன்முகமாய் ஆன்மா நிற்கும்பொழுது, அவ்வான்மா புருட தத்துவம் எனப் பெயர் பெறும். கலா சுத்தி செய்யுமிடத்து, இப் புருட தத்துவத்திற்கும் சுத்தி செய்யப்படும்.

பிரகிருதி, சாத்துவிகம் இராசதம் தாமதம் என மூன்று குணங்களாகப் பிரியும். அந்த மூன்று குணங்களும் தனித்தனி வேறு இரண்டு குணங்களைப் பொருந்தும்.

42. முக்குணங்களுள் சாத்துவிகமானது பிரகாசம் இலகுதை என்னும் இரண்டு குணங்களையும், இராசதமானது வியாவிருதி அடர்ச்சி என்னும் இரண்டு குணங்களையும், தாமதமானது கௌரவம் அநியயம் என்னும் இரண்டு குணங்களையும் உடையனவாம். இந்த மூவகை ஒன்பது குணங்களும் உயிர்

ஒவ்வொன்றிலும் பொருந்தியிருக்கும். இக்குணங்களின் தொழில் :- தமோ குணம் விடயபோகங்களில் இச்சையை உண்டாக்கும்; இராசத குணம் விடயபோகங்களைப் பற்றச் செய்யும்; சாத்துவிக குணம் அப்போகங்களை அறியச் செய்யும்.

புத்தி தத்துவமானது முக்குண சொரூபமாயிருந்து இந்திரியங்கள் வாயிலாக வரும் விடயங்களைப் பகுத்துணர்ந்து நிச்சயிக்கும். அன்றியும், ஐம்பது பாவங்களையும் செய்து நிற்கும்.

43. அகங்காரமானது பிராணாதி பஞ்ச வாயுக்களையும் இயக்கி எனக்குச் சமமானவர் ஒருவருமில்லையென அகந்தைகொள்ளற்குக் காரணமாயிருக்கும். இந்திரியங்கள் வாயிலாக வந்த விடயங்களை யான் என்றும் எனது என்றும் அபிமானிக்கும்.

மனமானது இச்சையே தனக்கு வடிவாய் ஒன்றைச் சங்கற்பம் பண்ணுவதும் எப்பொழுதும் சலனப்படுவதுமாயிருக்கும்.

சித்தமானது மனம் நினைந்த பொருளிலே துணிவு பிறவாமல் இஃது யாதோ எனச் சிந்தித்துக்கொண்டிருக்கும். இச்சித்தமானது மனத்தின் தொழிலாகிய ஐயநிலையேயன்றி ஒரு தனித் தத்துவமன்று.

44. சுரோத்திரம் தொக்கு சட்சு சிங்குவை ஆக்கிராணம் என்னும் ஐந்து ஞானேந்திரியங்களும் முறையே சத்தம் பரிசம் உருவம் இரதம் கந்தம் என்னும் விடயங்கள் ஐந்தையும் பொருந்தி அறியும்.

வாக்கு பாதம் பாணி பாயு உபத்தம் என்னும் ஐந்து கன்மேந்திரியங்களும் முறையே வசனம் கமனம் தானம் விசர்க்கம் ஆநந்தம் என்னும் ஐந்தொழில் களையும் செய்யும்.

45. ஆகாயம் முதலிய அகப் பூதங்கள் செவி மெய் கண் நாசி என்னும் இந்த இடங்களில் ஞானேந்திரியங்களுக்குப் பற்றுக்கோடாக நின்று சத்தம் முதலிய விடயங்கள் ஐந்தையும் ஆன்மா அறியும்படி செய்யும்.

புறப் பூதங்களுள், ஆகாயமானது வெளியாய் மற்றைப் பூதங்கள் நான்கும் தன்னிடத்து வந்தடைய இடங்கொடுத்து நிற்கும். வாயு சலித்துத் திரட்டும்; தேயு சுட்டு ஒன்றுவிக்கும்; அப்பு குளிர்ந்து பதம் செய்யும்; பிருதுவி உரத்துத் தரிக்கும். இவை முறையே புறப் பூதங்களின் குணமும் தொழிலுமாம்.

46. சுத்த தத்துவம் ஐந்து. சுத்தாசுத்த தத்துவம் ஏழு; அசுத்த தத்துவம் இருபத்து நான்கு. ஆகத் தத்துவம் முப்பத்தாறாம். ஆன்மா இத் தத்துவங்களோடு கூடி மயங்கிப் பெருந்துன்பத்தை அனுபவிக்கும். தூல சரீரம் அழியுங் காலத்துக் கலை முதலிய தத்துவங்களாலாகிய சூக்கும சரீரத்தோடு சென்று சுவர்க்கம் நரகம் முதலிய இடங்களில் பூதசாரம் பூதம் முதலிய உடம்புகளை எடுத்து, நல்வினை தீவினைப் பயன்களை அனுபவித்து, மறுபடியும் இப்பூமியில் வந்து பூத பரிணாமமாகிய தூல உடம்பை எடுக்கும்.

47. அண்டசம் சுவேசம் உற்பிச்சம் சாரயுசம் என்னும் நால்வகைத் தோற்றங்களையுடைய எழு வகைப் பிறப்புகளிலே தாவரங்கள் பத்தொன்பது

நூறாயிர பேதமாம்; ஊர்வன பதினைந்து நூறாயிரம்; தேவர்கள் பதினொரு நூறாயிரம்; நீர் வாழ்வன பறவை மிருகம் என்பன ஒவ்வொன்றும் பத்துப் பத்து நூறாயிரம்; மானுடர் ஒன்பது நூறாயிரம். இங்ஙனமே யோனி பேதம் எண்பத்து நான்கு நூறாயிரமாம்.

48. பல பிறவிகளிலே பிறந்திறந்து நல்வினை தீவினைகளைச் செய்து இன்பத் துன்பங்களை அனுபவித்து வரும் நிலை சகலாவத்தையாம்.

நிகழ்வினைப் பயனாகிய இன்பத் துன்பங்களிலும், பழ வினையாகிய புண்ணிய பாவங்களிலும், ஆகாமியமாகிய நல்வினை தீவினைகளிலும், விருப்பு வெறுப்பின்றி நிகழ்வினைப் பயனையும், பழ வினைப் பயனையும், ஒரு பிறவியிலே அருந்தத்தக்கதாக வரும் காலத்தில் தீவிர தர சத்திநிபாதமுண்டாம்.

49. சத்திநிபாதம் பொருந்தும் முறை பக்குவத்துக்கேற்ப மந்ததரம் மந்தம் தீவிரம் தீவிரதரம் என நான்கு விதம். அவற்றுள், தீவிரதர பக்குவர்க்குப் பரமசிவன் குருமூர்த்தியாய் எழுந்தருளி வந்து கேவல சகலங்கள் நிகழாதபடி நிறுத்தி மலத்தை நீக்கியருளுவர். இது சுத்தாவத்தையாம். சரியை கிரியா யோகங்களைச் செய்து புண்ணிய பேறடைந்தோரே இந்நான்கு சத்திநிபாதத்துக்கும் உரியவராவர்.

50. இம்மையில் அரிவையரோடு அனுபவிக்கும் சிற்றின்ப போகமே முத்தி என்றும், பஞ்ச கந்தங்களும் அறக்கெடுதலே முத்தி என்றும், முக்குணங்

களும் அடங்குதலே முத்தி என்றும், கன்மங்கள் அழிதலே முத்தி என்றும், ஆணவ மலம் நீங்கப் பெறுதலே முத்தி என்றும், உடல் நித்தியமாயிருப்பதே முத்தி என்றும், பிரகிருதியையும் புருடனையும் விவேகித்தறிதலாகிய விவேக ஞானமே முத்தி என்றும், ஆன்மா கெடுதலே முத்தி என்றும், அட்ட சித்திகளே முத்தி என்றும், ஆன்மா கல்லுப்போல் கிடப்பதே முத்தி என்றும் பல வகையாகச் சொல்லும் முத்திகளெல்லாம், குற்றத்தையுடைய முத்திகளாம். ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்களும் நீங்க, ஆன்மா சிவத்தினது திருவருளைக் கூடும் முத்தியே நிலைபெற்று விளங்கும் முத்தியாம். இதுவே முத்திகளுள் சிறந்ததாம்.

II. உண்மை அதிகாரம்

51. பொதுவதிகாரத்திற் கூறிய ஐம்பது செய்யுள்களும் பதி, பசு பாசங்களின் பொதுவியல்பைக் கூறினவாம். இனி, ஆன்ம விலக்கணம், ஐந்தவத்தைகளின் தன்மை, உணர்த்தும் தன்மை, ஞான வாய்மை, ஞானத்தின் பயன், ஐந்தெழுத்துண்மை, அணைந்தோர் தன்மை என்னும் இவற்றை அருள்வழி நின்று கூறுவாம்.

1. ஆன்ம இலக்கணம்

52. ஆன்மாவானது இத்தூல தேகத்தில் இலாடத் தானத்தைப் பொருந்தி நின்று கன்மத்துக் கீடாக வரும் சத்தாதி விடய போகங்களை இந்திரியங்கள்

வாயிலாக அறிந்து பற்றி அவ்விடயப் போகங்களை அனுபவிக்கும். அங்ஙனம் அனுபவிக்கும் தன்னையும் அனுபவிக்குமாறு செலுத்தி நிற்கும் திருவருளையும் உணர மாட்டாது. அவ்வாறு அறியும் தன்மையினீக்கி நனவு கனவு முதலிய ஐந்தவத்தையை ஆணவ மலத்தின் செயலால் பொருந்தி, மூலாதாரத்தில் கருவிகளொன்றுமின்றித் தான்மாத்திரமாயிருக்கும். இவ்வாறு சகல கேவலப்படுதல் ஆன்மாவுக்கு இயல்பாம்.

53 உடம்பு அறிவில்லாத சடமாகையாலும், இந்திரியங்கள் ஒவ்வொன்றாக ஒவ்வொரு விடயங்களை அறிதலாலும், அந்தக் கரணங்கள் எல்லாங்கூடி ஒரு விடயத்தை அறிதலாலும், பிராண வாயு சடமாதலாலும், விடயங்களை அறிவது ஆன்மாவாம். அவ்வான்மா சிவன் அறிவிக்க அறியும்.

54. ஆன்மா, தானே எவற்றையும் அறியும் தன்மையுடையதெனில், அறிகருவிகளான ஞானேந்திரியங்கள் அதற்கு வேண்டுவதில்லை. ஆன்மா அறியும் தன்மை இல்லாததெனில், அதற்கு அவ்விந்திரியங்களால் பயனில்லை. அவ்விந்திரியங்களே ஆன்மாவுக்கு அறிவையுண்டாக்கு மென்னில், அவை சடமாதலால் அறிவைக் கொடுக்க மாட்டா. இனி, எல்லாம் அறியவல்ல சிவன் ஆன்மாவுக்கு அறியும் தன்மையைக் கொடுப்பரென்னில், ஆன்மா இயற்கையில் அறிவில்லாத சடப் பொருளாக வேண்டும். சிவன் இயல்புக்கு மாறாக அசேதனப் பொருளுக்குச் சேதனத் தன்மையைக் கொடுக்க மாட்டார். ஆதலால் ஆன்மா இயற்கையில் அறிவுடைப் பொருளாம்.

வாக்கு பாதம் பாணி பாயு உபத்தம் என்னும் ஐந்து கன்மேந்திரியங்களும் முறையே வசனம் கமனம் தானம் விசர்க்கம் ஆநந்தம் என்னும் ஐந்தொழில் களையும் செய்யும்.

45. ஆகாயம் முதலிய அகப் பூதங்கள் செவி மெய் கண் நாசி என்னும் இந்த இடங்களில் ஞானேந்திரியங்களுக்குப் பற்றுக்கோடாக நின்று சத்தம் முதலிய விடயங்கள் ஐந்தையும் ஆன்மா அறியும்படி செய்யும்.

புறப் பூதங்களுள், ஆகாயமானது வெளியாய் மற்றைப் பூதங்கள் நான்கும் தன்னிடத்து வந்தடைய இடங்கொடுத்து நிற்கும். வாயு சலித்துத் திரட்டும்; தேயு சுட்டு ஒன்றுவிக்கும்; அப்பு குளிர்ந்து பதம் செய்யும்; பிருதுவி உரத்துத் தரிக்கும். இவை முறையே புறப் பூதங்களின் குணமும் தொழிலுமாம்.

46. சுத்த தத்துவம் ஐந்து. சுத்தாசுத்த தத்துவம் ஏழு; அசுத்த தத்துவம் இருபத்து நான்கு. ஆகத் தத்துவம் முப்பத்தாறாம். ஆன்மா இத் தத்துவங்களோடு கூடி மயங்கிப் பெருந்துன்பத்தை அனுபவிக்கும். தூல சரீரம் அழியுங் காலத்துக் கலை முதலிய தத்துவங்களாலாகிய சூக்கும சரீரத்தோடு சென்று சுவர்க்கம் நரகம் முதலிய இடங்களில் பூதசாரம் பூதம் முதலிய உடம்புகளை எடுத்து, நல்வினை தீவினைப் பயன்களை அனுபவித்து, மறுபடியும் இப்பூமியில் வந்து பூத பரிணாமமாகிய தூல உடம்பை எடுக்கும்.

47. அண்டசம் சுவேசம் உற்பிச்சம் சாரயுசம் என்னும் நால்வகைத் தோற்றங்களையுடைய எழு வகைப் பிறப்புகளிலே தாவரங்கள் பத்தொன்பது

நூறாயிர பேதமாம்; ஊர்வன பதினைந்து நூறாயிரம்; தேவர்கள் பதினொரு நூறாயிரம்; நீர் வாழ்வன பறவை மிருகம் என்பன ஒவ்வொன்றும் பத்துப் பத்து நூறாயிரம்; மானுடர் ஒன்பது நூறாயிரம். இங்ஙனமே யோனி பேதம் எண்பத்து நான்கு நூறாயிரமாம்.

48. பல பிறவிகளிலே பிறந்திறந்து நல்வினை தீவினைகளைச் செய்து இன்பத் துன்பங்களை அனுபவித்து வரும் நிலை சகலாவத்தையாம்.

நிகழ்வினைப் பயனாகிய இன்பத் துன்பங்களிலும், பழ வினையாகிய புண்ணிய பாவங்களிலும், ஆகாமியமாகிய நல்வினை தீவினைகளிலும், விருப்பு வெறுப்பின்றி நிகழ்வினைப் பயனையும், பழ வினைப் பயனையும், ஒரு பிறவியிலே அருந்தத்தக்கதாக வரும் காலத்தில் தீவிர தர சத்திநிபாதமுண்டாம்.

49. சத்திநிபாதம் பொருந்தும் முறை பக்குவத்துக்கேற்ப மந்ததரம் மந்தம் தீவிரம் தீவிரதரம் என நான்கு விதம். அவற்றுள், தீவிரதர பக்குவர்க்குப் பரமசிவன் குருமூர்த்தியாய் எழுந்தருளி வந்து கேவல சகலங்கள் நிகழாதபடி நிறுத்தி மலத்தை நீக்கியருளுவர். இது சுத்தாவத்தையாம். சரியை கிரியா யோகங்களைச் செய்து புண்ணிய பேறடைந்தோரே இந்நான்கு சத்திநிபாதத்துக்கும் உரியவராவர்.

50. இம்மையில் அரிவையரோடு அனுபவிக்கும் சிற்றின்ப போகமே முத்தி என்றும், பஞ்ச கந்தங்களும் அறக்கெடுதலே முத்தி என்றும், முக்குணங்

களும் அடங்குதலே முத்தி என்றும், கன்மங்கள் அழிதலே முத்தி என்றும், ஆணவ மலம் நீங்கப் பெறுதலே முத்தி என்றும், உடல் நித்தியமாயிருப்பதே முத்தி என்றும், பிரகிருதியையும் புருடனையும் விவேகித்தறிதலாகிய விவேக ஞானமே முத்தி என்றும், ஆன்மா கெடுதலே முத்தி என்றும், அட்ட சித்திகளே முத்தி என்றும், ஆன்மா கல்லுப்போல் கிடப்பதே முத்தி என்றும் பல வகையாகச் சொல்லும் முத்திகளெல்லாம், குற்றத்தையுடைய முத்திகளாம். ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்களும் நீங்க, ஆன்மா சிவத்தினது திருவருளைக் கூடும் முத்தியே நிலைபெற்று விளங்கும் முத்தியாம். இதுவே முத்திகளுள் சிறந்ததாம்.

II. உண்மை அதிகாரம்

51. பொதுவதிகாரத்திற் கூறிய ஐம்பது செய்யுள்களும் பதி, பசு பாசங்களின் பொதுவியல்பைக் கூறினவாம். இனி, ஆன்ம விலக்கணம், ஐந்தவத்தைகளின் தன்மை, உணர்த்தும் தன்மை, ஞான வாய்மை, ஞானத்தின் பயன், ஐந்தெழுத்துண்மை, அணைந்தோர் தன்மை என்னும் இவற்றை அருள்வழி நின்று கூறுவாம்.

1. ஆன்ம இலக்கணம்

52. ஆன்மாவானது இத்தூல தேகத்தில் இலாடத் தானத்தைப் பொருந்தி நின்று கன்மத்துக் கீடாக வரும் சத்தாதி விடய போகங்களை இந்திரியங்கள்

வாயிலாக அறிந்து பற்றி அவ்விடயப் போகங்களை அனுபவிக்கும். அங்ஙனம் அனுபவிக்கும் தன்னையும் அனுபவிக்குமாறு செலுத்தி நிற்கும் திருவருளையும் உணர மாட்டாது. அவ்வாறு அறியும் தன்மையினீக்கி நனவு கனவு முதலிய ஐந்தவத்தையை ஆணவ மலத்தின் செயலால் பொருந்தி, மூலாதாரத்தில் கருவிகளொன்றுமின்றித் தான்மாத்திரமாயிருக்கும். இவ்வாறு சகல கேவலப்படுதல் ஆன்மாவுக்கு இயல்பாம்.

53 உடம்பு அறிவில்லாத சடமாகையாலும், இந்திரியங்கள் ஒவ்வொன்றாக ஒவ்வொரு விடயங்களை அறிதலாலும், அந்தக் கரணங்கள் எல்லாங்கூடி ஒரு விடயத்தை அறிதலாலும், பிராண வாயு சடமாதலாலும், விடயங்களை அறிவது ஆன்மாவாம். அவ்வான்மா சிவன் அறிவிக்க அறியும்.

54. ஆன்மா, தானே எவற்றையும் அறியும் தன்மையுடையதெனில், அறிகருவிகளான ஞானேந்திரியங்கள் அதற்கு வேண்டுவதில்லை. ஆன்மா அறியும் தன்மை இல்லாததெனில், அதற்கு அவ்விந்திரியங்களால் பயனில்லை. அவ்விந்திரியங்களே ஆன்மாவுக்கு அறிவையுண்டாக்கு மென்னில், அவை சடமாதலால் அறிவைக் கொடுக்க மாட்டா. இனி, எல்லாம் அறியவல்ல சிவன் ஆன்மாவுக்கு அறியும் தன்மையைக் கொடுப்பரென்னில், ஆன்மா இயற்கையில் அறிவில்லாத சடப் பொருளாக வேண்டும். சிவன் இயல்புக்கு மாறாக அசேதனப் பொருளுக்குச் சேதனத் தன்மையைக் கொடுக்க மாட்டார். ஆதலால் ஆன்மா இயற்கையில் அறிவுடைப் பொருளாம்.

55. சுட்டறிவினால் அறியப்பட்ட பொருள்களெல்லாம் அசத்தாய் அழிந்து போவனவாம். ஆன்ம அறிவு கருவிகளோடு கூடி அதனதன் வண்ணமாய் நின்று சுட்டி அறியும் விடயங்களே அசத்தாம். சிவம் ஆன்ம அறிவினால் அறியப்படாதது.

56. அசத்தை அசத்தென்றறிந்தது எந்த அறிவெனில், அறிவித்தாலன்றி அறிய மாட்டாத உயிர் தானாக அதனை அறிய மாட்டாது. முற்றறிவுடைய சிவன் அதனைச் சுட்டி அறிய வேண்டுவதில்லை. கருவிகள் சடமாதலால் அவைகளும் அறியமாட்டா.

இனி, உயிர் கருவிகளோடு கூடி அறியுமெனில், தானாக அறிய மாட்டாத உயிரும் அறிவில்லாத கருவிகளுங்கூடி அறியமாட்டா.

உயிர் அருளோடு கூடி அறியுமென்னில், பெத்த நிலையில் உயிர் அருளோடு பொருந்தாதாதலால், அந்நிலையில் உயிர் அறிய மாட்டாது.

அருளும் கருவிகளும் கூடி அறியுமென்னில், ஒளியும் இருளும் போலுமாதலின் அவை இரண்டும் ஒருங்கு கூடி நில்லா.

57. அசத்தாகிய பாசம் சடமாகையால் சத்தாகிய சிவத்தை அறிய மாட்டாது. சத்தாகிய சிவம் வியாபக அறிவாதலான் அசத்தாகிய பாசத்தைப் பகுத்தறியாது. சத்தும் அசத்துமாகிய இரண்டினையும் அறியும் இயல்புடையது இவற்றின் வேறாய ஆன்மாவாம். இவ்வான்மா திருவருளோடு கூடிய முத்தி நிலையில் சத்துடன் நின்று அசத்தை நீக்கும் தன்மையால் சதசத்து எனப்படும்.

58. விளக்கே கண்ணுக்கு ஒளியைக் கொடுத்துப் பொருள்களைக் காட்டுமென்னில், அதன் முன்பு கண்ணுக்கு இயற்கையில் ஒளி இல்லை என்று முடியும். விளக்கொளி கலந்த பொருள்களைக் கண்ணொளியானது வேறாய் நின்று காணும். அங்ஙனம் காண்கையிலும், விளக்கொளியோடு கூடிக் காண்பதொழியக், கண்ணொளி தனித்து நின்று காண மாட்டாது. கண்ணொளி விளக்கொளியோடு கலந்து நிற்கும். அவ்வாறு நிற்பினும் அவை ஒன்றல்ல. பொருள் வேறுபட்டால் இரண்டாம்.

59. ஆன்மாவின் இயல்புணர்ந்தவர்கள் ஆன்மா தேகத்தில் ஓரிடத்திலிருந்து அறியும் என்றும், தேக முழுவதும் நிறைந்து நின்று அறியும் என்றும், எவ்விடத்தும் வியாபியாய் நின்றறியும் என்றும், அறிவிக்க அறிதலின்றித் தானே அறியும் என்றும், மனம் முதலிய கருவிகள் அறிவைக் கொடுக்க அறியும் என்றும் சொல்லார். ஆன்மா அறியும் தன்மை எப்படியெனின், தன்னை அடுத்த பொருள்களின் நிறங்களையே தன்னிறமாகக் கொண்டு காட்டும் படிகம்போலச் சார்ந்ததன் வண்ணமாய் நின்றறியும்.

2. ஐந்தவத்தை இலக்கணம்

60. கீழாலவத்தையிலே நிகழும் துரியாதீதத்தில் கருவிகளொன்றுமின்றிப் புருடன் மாத்திரமிருக்கும். துரியத்தில் பிராண வாயு புருடனைப் பொருந்தித்

தொழிற்படும். சுழுத்தியில் அதனோடு சித்தமும் பொருந்தித் தொழிற்படும். சொப்பனத்தில் அவ்விரண்டினோடு சத்தாதி ஐந்தும், வசனாதி ஐந்தும், மனம் புத்தி அகங்காரம் மூன்றும், வாயுக்கள் ஒன்பதும் பொருந்தித் தொழிற்படும். சாக்கிரத்தில் அவற்றோடு ஞானேந்திரியங்கள் ஐந்தும், கன்மேந்திரியங்கள் ஐந்தும் பொருந்தித் தொழிற்படும்.

61. மேற்கூறிய ஐந்தவத்தைகளிலும் தொழிற்படும் கருவிகளெல்லாம் இலலாடத் தானத்திலே ஐந்தவத்தையையும் பொருந்திட விடயங்களைக் கிரகிக்கும் முறைமையை நீ அறிந்து, அவ்விடயத் தோற்றரவுகள் ஒழியும்படி ஞானாசாரியர் உபதேசித்த முறைப்படி சாதனை செய்துவரின், அவ்விலலாடத் தானத்திலே நின்மல சாக்கிரம் முதலிய ஐந்தவத்தைகளும் நிகழும்.

62. காரிய கேவலத்திலே துரியாதீதமானது காரண கேவலத்தின் தன்மையை ஒக்கும். காரிய சகலத்திற்கு சாக்கிரமானது காரண சகலத்தின் தன்மையாயிருக்கும். காரிய சுத்தத்தில் சாக்கிராதீதமானது பரமுத்தியான சுத்தாவத்தையின் தன்மையதாயிருக்கும்.

3. உணர்த்தும் தன்மை

63. ஆன்மா ஒரு விடயத்தை நுகரும்பொழுது, ஐம்பொறிகளிலொன்றும், பஞ்ச பூதங்களிலொன்றும், அந்தக் கரணங்கள் நான்கும், கலாதிகள் ஐந்தும் ஆகிய பதினொரு தத்துவங்களையும் பொருந்தி நின்று அவற்றின் உதவியால்

நுகர்ச்சி செய்யும். இந்த முறைமையிலன்றி ஆன்மா ஒன்றை அறியமாட்டாது. ஆன்மா இல்லாமல் அத்தத்துவங்களும் தொழிற்படமாட்டா.

64. ஒருவர் உணர்த்திலான்றித் தானே உணர மாட்டாத உயிர் இத் தத்துவங்களைத் தான் அறிந்து சாரமாட்டாது. சடமாகிய அத்தத்துவங்களும், தாமாக உயிரைச் சார அறியா. உயிர் தன்னால் சாரப்பட்ட தத்துவங்களின் சொருபமே தன் சொருபமாகக் கொண்டு நிற்கும். ஆதலால், இயற்கை உணர்வினனாகிய முதல்வன் அக்கருவிகளைக் கூட்ட, அவன் செயலால் அக்கருவிகளோடு கூடி நின்று ஆன்மா போகங்களை நுகரும்.

65. ஐம்பொறிகள் வாயிலாக வரும் விடயங்களை ஆன்மா மனத்தைத் துணையாகக் கொண்டு அவற்றை அறியுமாறுபோல, ஆன்மாவும் சிவஞானத்தைத் துணையாகக் கொண்டு விடயங்களை அறியுமென்னில், ஆன்மாவே கருத்தாவாவன். ஆகையால், அது பொருந்தாது.

சிவனுடைய ஞானம் ஆன்மாவில் பொருந்தி நின்று ஆன்மாவுக்காக அறியு மென்னில், பசியினாலுண்ண வேண்டிய ஒருவனுக்காக மற்றொருவன் உண்டது போல முடியும். ஆதலால் அதுவும் பொருந்தாது. ஆகையால் சிவன் அறிவிக்க ஆன்மா விடயங்களை அறியும்.

66. இராக் காலத்திலே மறைத்து நின்ற இருளைச் சூரியன் உதித்து நீக்கியபொழுது, மனிதர் தாம் அவ்விராக் காலத்தில் அடைய வேண்டும் என எண்ணியிருந்த பொருள்களின் நிலையைக் கண்டு அறிந்து அடைவர்.

அப்படிக் கண்டறிந்தது சூரியனது உபகாரத்தால் என்று நினையார். அதுபோல, கேவல மறைப்பிலிருந்த உயிர் கலையாதி கருவிகளால் அவ்விருள் நீங்கப் பெற்றுத் திருவருள் உபகாரத்தை மறந்து தானாகவே தன் செயலால் அறிவதாகக் கருதி அறியும்.

67. அந்தக் கரணங்களும் ஐம்பொறிகளும் ஆன்மாவினது சகாயத்தால் விடயங்களை எப்பொழுதும் அறியும். அப்படி ஆன்மாவினால் அறிகின்றோம் என்பதை அவற்றில் ஒரு கருவியும் அறியமாட்டாது. அதுபோல ஆன்மாக்களும் சிவன் அறிவிக்க யாவற்றையும் அறியும். அப்படிச் சிவனால் அறிகின்றோமென்பதை அறிய மாட்டா. கன்மப் பகுதிகளை அறிந்து கருவிகளைக் கூட்டி அக்கன்மப் பயன்களை அநுபவிக்கும்படி செய்பவர் நின்மலனாகிய சிவனாம்.

4. ஞான வாய்மை

68. அறிகருவிகளாகிய கரணங்கள் இல்லையாயின், ஆன்மா ஒன்றையும் அறியவியலாது. இக்கரணங்களாலே உண்மை ஞானம் உதிக்க மாட்டாது. இக்கரணங்களைக் கொண்டு பிறவிகடோறும் ஈட்டிய சரியை கிரியா யோக விசேடத்தினாலே பரமசிவன் திருவருளே திருமேனியாகக் கொண்டு குருமூர்த்தியாய் எழுந்தருளி வந்து இக்கரணங்களை நீக்கித் திருவடி நீழலை அடையும்படி அந்த உண்மை ஞானத்தைக் கொடுத்தருளுவர்.

69. படிகமானது தன்னை அடுத்த பல பொருள்களின் நிறங்களையும் தன்னிற மாகக் கொள்ளும்படி செய்வதும், அந்நிறங்களை விட்டுத் தனது சொந்த நிறத்தையே கொள்ளும்படி செய்வதும் ஆதித்தனது ஒளியேயாம். அப்படிச் செய்யும் அவ்வொளி, தான் அவற்றின் தன்மைகளைப் பொருந்த மாட்டாது. அதுபோலப் பூமியிலே தன்னிடத்துப் பொருந்திக் காரியப்படும் சித்தும் சடமுமாகிய பொருள்களின் தன்மைகளைத் தான் பொருந்தாது. முத்தியின்பம் பெறுமாறு எங்கும் பரிபூரணமாய் விளங்குகின்ற சிவஞானமே மேலாகிய ஞானமாம்.

70. மாயை கன்மங்களோடு கூடிய ஆன்மாவின் மருள்நிலையில் சிவஞானம் வெளிப்படாது மறைந்து நிற்கும். அவற்றின் இயல்புகளை அறிந்து நீங்கிய அருள் நிலையில் அது வெளிப்பட்டுப் பிரகாசமாய் நிற்கும்.

5. ஞானப் பயன்

71. ஆன்மா ஞானத்தை அடைதலினால் வரும் பயன் ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி, ஆன்ம லாபம் என மூன்றாம். அவை ஞான தரிசனம், தான் பணியை நீத்தல், ஞேயத்தழுந்தல் என்னும் இவற்றில் அடங்கும்.

72. ஆன்மா தன்னுடைய அறிவினால் ஒன்றை அறியும் தன்மை தனக்கில்லை யாயினும், கருவிகள் வாயிலாகப் போகங்களை நுகரும்பொழுது, தன்னறிவு

கொண்டு அறிந்ததாகவே கருதி ஒவ்வொன்றையும் அனுபவிப்பவன். சிவன் அருளாலே அவ்வருளை அறிந்தால் தனது அறிவானது கருவிகளோடு கூடி நின்று விடயங்களை அறியும் முறைமையையும் ஆன்மாவாகிய தனது இயல்பையும், அவ்வருளோடு கூடி வேறற நின்று அவ்வான்மாவே தரிசிக்கும்.

73. தத்துவங்களின் இயல்பை விசாரித்தறியும்பொழுது, அவை தனக்கு அந்நிய மான சடப் பொருளென்று அறிவது சிவஞானத்தின் உபகாரத்தாலாம். அப்படி அறிகின்ற தற்போதமும் விட்டு நீங்க, ஆன்மா அந்த ஞானமேயாய்ச் சுத்தி யடையும். அப்பொழுதே அந்த ஞானத்துக்கு முதலாகிய ஞேயம் தோன்றும்.

74. அந்த ஞானத்தையன்றி அதற்கு ஒரு முதலுமுண்டென்று கூறுவது என்னையெனில், சிவத்தினது அருளே அந்த ஞானமாம். அன்றியும், ஒளியானது அதன் முதலாகிய ஆதித்தனையன்றி நில்லாதவாறுபோல, சிவத்தையன்றி அருளும் நில்லாது. ஆகையால், நின்மலராகிய சிவன் முதலாம். அவரிடத்து விளங்கும் அருள் அவரது சத்தியாம்.

75. அந்தச் சத்தியானது ஞானப்பிரகாசமாயிருக்கும். சிவமின்றி அந்தச் சத்தி தனித்து ஒரு முதலாய் நிற்க மாட்டாது. அச்சத்தி ஆன்மாவைப் பந்தித்த மும்மலங் களையும் வாட்டிச் சிவத்தை ஆன்மாவுக்குத் தரிசிப்பிக்கும். அது எங்கும் நிறைந்த பேரிருளை நீக்கிச் சூரியனைக் காட்டுகின்ற அதன் பிரகாசம் போல்வதாம்.

76. பேய் பிடித்தவனிடத்திலே பேயின் குணமும் தொழிலும் தோன்றினாற்போலச் சிவனருளைப்பெற்ற ஆன்மாவிடத்திலே சிவனுடைய முற்றறிவு முதலிய குணங்களும், பஞ்ச கிருத்தியமும் உண்டாகுமென்பது பொருந்தாது.

77. குருடனாயும் ஊமையாயும் முடவனாயுமிருக்கும் ஒருவனைக் கண்ணும் வாயும் காலும் குறைவற்றிருக்கும் ஒரு பேய் பிடித்தவிடத்து, அவன் ஒன்றைக் காணவும் பேசவும் நடக்கவும் செய்யாது, அவனிடத்து உள்ளதையே விளங்கச் செய்யும். அதுபோல, ஆன்மாவினிடத்துப் பொருந்திய அருளானது அவ்வான் மாவின் அறிவிச்சை செயல்களையே விளக்கி நிற்கும். சிவன் ஐந்தொழிலும் செய்யு மிடத்து தமக்கெனத் திருமேனிகொண்டு, அம்மேனியின் வாயிலாகத் தொழில் செய்வர்.

78. கலாதி தத்துவங்களால் வரும் ஏகதேச அறிவின் இயல்பை உணர்ந்து, அவ் வேகதேச அறிவுக்குக் காரணமான மலங்கள் நீங்கப்பெற்ற அருள் நிலையில், அம்மலங்களின் வாசனை தரக்காதபடி அவ்வருள் வியாபகத்துள்ளாக ஆன்மா அடங்கிச் சிவத்தோடு ஏகனாகி நிற்பின், அதன் வியாபக அறிவு விளங்கித் தோன்றும்.

79. திருவருளை அடைபவர் சிவமாய் விடுதலேயன்றி அவ்விடத்து வேறுமொரு பயன் தோன்றுமென்ற முறைமையேதென்னில், பெத்த நிலையில் ஆன்மாக்கள் மலமறைப்பினால் வியாபகமாகிய தமது சொரூபத்தை

அறியாதிருந்தனர். சுத்த நிலையிலும் திருவருளின் உபகாரத்தால் தமது வியாபக அறிவு விளங்கும்படி காணாராயின், பரமசிவனது திருவடியைப் பெறுதற்கு ஏதுவாகிய சிவஞானத்தை அறிதலுமில்லை, அத்திருவடியைக் கூடுதலுமில்லையாம்.

80. சகலகேவலப்படாமலும், தற்போதச் சேட்டையின்றியும், சிவத்தோடு ஏகனாகி நிற்றல் சாக்கிராதீதமாம்.

81. கருவிகள் தாமாகவே அடங்கா. தற்போதத்தால் அடக்கலாமெனில், போதம் அடங்காது நிற்கும். கருவிகள் அடங்கவே போதமும் அடங்குமெனின், உள்ள சிற்றறிவும் கெட்டுக் கேவலம் வந்து மூடும். ஆகையால், கருவிகளைத் திருவருளில் ஒடுக்கினாலன்றி அவை ஒடுங்காவாம்; சிவனையும் அறிந்து அனுபவிக்க இயலாதாம்.

82. ஐம்பொறிகளும் புறத்தே சென்று சத்தாதி விடயங்களைப் பற்றி ஆன்மாவுக்கு அறிவைக் கொடுக்கும் காலத்து, அவ்விடயங்களில் ஒன்றைப் பொருந்தி அதைச் சுட்டி அறிதல் ஆன்ம போதத்தின் இயல்பாம். பகற்காலத்தில் எரியும் விளக்குப்போல அப்போதம் சீவியாது ஒழியப் பெறின், ஆன்மா சிவத்தை அடையும். அதனால் பிறப்பினையும் அறுக்கலாம்.

83. கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை என ஞானம் நான்கு வகை. இந்த முறையிலே நின்று கேட்டுச் சிந்தித்து தெளிந்து நிட்டை கூடினவர்களே முத்தியைப் பெற்றவராவர்.

84. பாச ஞானத்தினாலும், பசு ஞானத்தினாலும் சிவனை அறியக்கூடாது. சிவஞானத்தைப் பொருந்தி, அதன் உபகாரத்தாலே தற்போதம் நீங்கி, அந்த ஞானத்துக்கு மேலான சிவத்திலே அத்துவிதமாய்க் கலந்து, அன்பு செய்து, சிவாநந்தத்தை அனுபவித்து நிற்பது ஞான நிட்டையாம்.

85. முன்சொன்ன முறையிலே நிட்டை கூடுதல் அரிதாயின் முதல்வனது அத்துவித நிலையை மறவாது பத்தி செய்தலால், அவன் திருவடியைக் கூடுதலாகிய நிட்டை கைகூடும்.

86. பாவனைகளால் சிவனை அடைதல் அரிது. சிவத்தினது அருளைப் பெற்ற அடியாருக்கு ஒரு பாவனையும் வேண்டியதில்லை. அவ்வருளே சிவத்தை அடைவிக்கும்.

87. பிரமமாகிய ஒரு பொருளே பிரமமும் சீவர்களுமென இரண்டாக எண்ணப்பட்டிருந்த முத்தி நிலையில் அவ்விரண்டும் ஒன்றாய் விடுமென்னின், சீவர்களும் பிரமத்தின் இயல்புடையராக வேண்டும். அப்படியில்லாமையால் அது பொருந்தாது.

வேறாகிய சிவமும் ஆன்மாவும் முத்தி நிலையில் ஒன்றாகுமென்னின், இரண்டு பொருள் ஒன்றாவதில்லை. அன்றியும் ஒன்று அழிய வேண்டியதாகும்.

சிவமும் ஆன்மாவும் ஒன்றாவதில்லையெனின், சிவத்தோடு ஆன்மா ஒன்றுதலே முத்தியென்பதற்கு மாறாய்ச் சிவமும் ஆன்மாவும் கூட மாட்டா என முடியும். தீயில் பொருந்திய இரும்பைப் போலச் சிவத்தில் பொருந்திய ஆன்மா சிவத்தின் குணங்களைப் பொருந்தப்பெறுமெனின், ஒரு பொருளின் குணம்

மற்றொரு பொருளுக்கு வருதலில்லையாம். வருமெனின், சிவனுக்குரிய ஐந்தொழில் ஆன்மாவிடத்தும் காணப்பட வேண்டும். ஆகையால், இவையெல்லாம் பொருந்துவனவல்ல.

ஆன்மா சிவத்தோடு பொருந்தி நின்று, சிவானுபவத்தைப் பெறும் முத்தி நிலைக்கு உவமை கூறின், ஆன்மா பெத்த நிலையில் ஆணவ மலத்தோடு பொருந்தி நின்றது எப்படியோ அப்படியேயாம்.

88. ஆணவ மலமானது முத்தி நிலையில் அழிந்துவிடுமென்னின், அது நித்தம் என்பது பொருந்தாது. முத்தி நிலையில் அழியாதென்னின், ஞானம் பொருந்த மாட்டாது. உண்மை எப்படியெனின், மலம் நித்தமாயிருக்க அதன் சத்தியே வலி அழியும் என்பதாம்.

89. அளவில்லாத பிறவிகளைத் தருதற்கேதுவாயிருக்கின்ற புண்ணிய பாவ வடிவாயுள்ள சஞ்சிதவினை வறுத்த வித்துப் போல ஆசாரியனது திருநோக்கால் நீங்கும். உடலுக்குரிய பிராரத்த வினை உடலுள்ளளவும் நின்று அனுபவத்தினால் ஒழியும். அப் பிராரத்தப் பயனை நுகரும்பொழுது வந்தேறும் ஆகாமிய வினை ஒளிமுன் இருள் போல ஞானத்தால் அழியும்.

6. புனிதன் நாமம்

90. மல மாயை கன்மங்களாகிய பந்தங்கள் நீங்கிப் பிராரத்த வினைக்கீடாகச் சரீரம் சஞ்சரிக்கும்பொழுது மல வாசனை தாக்காதொழியாது. அதுபற்றிப் பிராரத்த

வினையும் மெலிதாய் வந்து தாக்கும். ஞானாசாரியர் உபதேசப்படி ஐந்தெழுத்தை உச்சரிப்பவரை அவ்வாசனைகள் தாக்கவும் மாட்டா; ஆகாமிய வினை ஏறாதாதலின், அவர் நிற்கும் நிலையினின்று பிறழச் செய்யவுமாட்டா.

91. சூக்கும ஐந்தெழுத்திலே திரோதமும் மலமும் ஒரு புறமாகவும், அருளும் சிவமும் மற்றொரு புறமாகவும் சூழ்ந்து நிற்க, இவற்றின் நடுவே நிற்பது ஆன்மாவாம். இங்ஙனம் நடுவே நிற்பதினாலும், மலதிரோதங்களின் மயக்க மிகுதியினாலும், விடய போகங்களில் அழுந்தி, அருளிலும் சிவத்திலும் விருப்பின்றிப் பிறந்திறந்துழலும், விடய போகங்களில் வெறுப்புண்டாகி முத்தியில் விருப்பமுடையோருக்கு இவ்வைந்தெழுத்தை உபதேசிக்கலாம்.

92. ஆணவ மலமும் திரோதமும் நீங்கும் பொருட்டுச் சூக்கும ஐந்தெழுத்தைச் செபிக்க வேண்டும். அங்ஙனம் செபித்தலினால் திரோதான சத்தி மலத்தை நீக்கி அருட்சத்தியாய் மாறி நின்று பிரகாசிக்கும். பின்பு, ஆன்மா அவ்வருள் தாரகமாக அதனில் அடங்கி அதுவேயாய்ச் சிவத்தோடு ஏகமாகும். ஐந்தெழுத்து மகிமை இதுவாம்.

7. அணைந்தோர் தன்மை

93. சீவன் முத்தர் மும்மலங்களும் நீங்கப் பெற்றுத் தம் பணி நீத்துச் சிவத்தோடு ஏகமாகி நின்று, பேரானந்தத்தை அனுபவிப்பர் என்பதாம்.

94. சீவன் முத்தர் முன்புள்ள நியமங்களைச் செய்வதுமில்லை. தாமாக விடுவதுமில்லை; அவர் சிவமாகிய மெய்ப்பொருளொன்றையே கண்டு கொண்டிருப்பர்; ஏனைய நியமங்களெல்லாம் தாமாக ஒழிந்துபோம்.

95. சீவன் முத்தர் திருவருளை எங்கும் ஒரு தன்மைத்தாகக் கண்டு, அவ்வருளே தமக்கு வடிவாய்ப் பிராரத்த வினைக்கீடாக நிகழ்வனவெல்லாம் நிகழ, அவற்றாலே தாக்கப்படாது, சிவத்திலே ஏகமாகிப் பேரானந்தமுற்றிருப்பர்.

96. சாரசரங்களனைத்திலும் திருவருள் கலந்து வியாபகமாய் நிற்றலால், தனக்கு எதிர்ப்படும் பொருள்களை அத்திருவருள் வடிவாகக் காணில் தானும் அவ்வருள் வடிவாகி அந்த ஞான நிலையை அடைவன்.

97. பிரபஞ்சப் பற்றை விட்டு, அருள்வழி நின்று, நிகழ்வன எல்லாவற்றையும் அவ்வருட் செயலாகக் கண்டு, பஞ்சாக்கரமோதி, முதல்வனது அத்துவித நிலையை நினைந்து துதித்தல் ஞான பூசையாம்.

98. ஞானக் கடலில் எழுந்த சிவானந்த அமிர்தத்தைப் பருகிய சீவன் முத்தர் சிவனடியார்களையும் சிவலிங்கம் முதலாகிய திருமேனிகளையும் சிவமென்று கண்டு வணங்கிக் கண்களில் ஆனந்த அருவி சொரிய நாத்தழுதழுப்ப உரை தடுமாற ஆனந்த வெள்ளத்துள் அமிழ்ந்தி அச்சிவமொன்றையே தரிசித்திருப்பர்.

8. நூல் கருத்து

99. உலோகாயதம் முதல் சிவாத்துவித சைவமீறாகிய சமயத்தவரால் கொண்டாடப்படாத கோட்பாடுகளையுடையதாய், வேதாந்தமாகிய உபநிடதங்களின் உண்மைப் பொருளாய், பேரின்பத்தை விளைவிப்பதாய், சற்காரியவியல்பு கூறுவதாய், மலைவற்றிருக்கும் சைவ சித்தாந்த உணர்வால், பெத்த முத்தி நிலைகளை வரையறுத்து இந்நூலில் சொன்னோம்.

9. நூல் உபதேசிக்கும் முறை

100. கூறப்படும் பொருள்களை ஆசாரியன் ஏதுக்களாலும், உவமைகளாலும் நிச்சயித்து, மலைவறக்கொள்ளும் பரிபக்குவமுடைய மாணவனுக்கு, இந்நூலைத் திருவருள் கொடுத்துக் கூறலாம்.

அனைந்தோரை ஆனந்தம் ஆக்கும் சோதிப் பொருள்!

பார்பதம் அண்டம் அனைத்துமாய் முளைத்துப் பரந்ததோர் படரொளி பரப்பே!
நீர்உறு தீயே! நினைவதேல் அரிய நின்மலா! நின்னருள் வெள்ளச்
சீர்உரு சிந்தை எழுந்ததோர் தேனே! திருப்பெருந்துறை சிவனே!
யார் உறவு எனக்கு இங்கு யார்அயலுள்ளார் ஆனந்தம் ஆக்கும் என்சோதி!

பாட்டு அகராதி

(காப்பு - 1, பாயிரம் 1 - 12, (12); பொது 13 - 50 (38); உண்மை 51 - 100 (50 ஆக 101)

அகம்புறம்	63
அடைபவர்	58
அண்டம்	63
அரிவையரி	48
அருத்திமிகும்	34
அலகுஇல்குணம்	44
அல்லல்மிக	34
அழிந்திடும்	61
அறிந்திடும்	54
அறிவினால்	51
அறிவு எனில்	50
அந்நியம்	40
ஆசு உறு	62
ஆனதனு	44
ஓங்கு ஒளியாய்	19
இங்கு இவை	49
இத்தகைமை	42
இந்நிலை தன்	58
இந்நிலையில்	46
இருள்நனி	54
இவ்வகை	53
இனையபல	47
இன்மை மலம்	39
இன்றுநோக்கு	58
ஈங்கிது	28
உரு ஆதி	32
உரு உணர்வு	50
உலகம் எலாம்	28
உறைதரும்	57
தேசு உற	56
உற்றதொழில்	37
உன்னல் அரும்	32
எண்அரிதாய்	30
எண்ணஒன்று	52
எல்லைஇல்	61
எவ் அறிவு	51
என்னை	23
ஏகமாய்	31
ஏற்ற இவை	30
ஐவகையால்	43
ஒடுங்கிடா	59
ஒளியான	19
ஒன்று	60
ஓங்கிவரும்	39
புகல் அரும்	57

ஓரிடத்து 59
கண் ஒளி 52
கண்டு அறி 54
கந்தமலர் 29
கன்ம நெறி 36
காட்டிடும் 55
கிரியை என 25
குறிப்பிடம் 63
சத்து இது 51
சுத்தமாம் 57
செறிந்திடும் 50
சொன்ன முறை 45
தத்துவம் 56
தன்னறி 56
தனக்கு 54
திருவருள் 65
திரு எழுத்து 62
தீங்கு உறு 62
தெரித்த குரு 25
தேவர்பிரான் 22
தொண்டர்கள் 64
தொன்மையவாம் 26
தோற்றியிடும் 47
நண்ணியிடும் 36
நலந்தரல் 21
நாடிய சத்திர 48
நிலவு 64
நீக்கம் இல் 53
நீடுபரா 27
படைத்தது ஒரு 33
பந்தமான 61
பரந்த 20
பல கலை 27
பற்றிடும் 59
பல் நிறம் 55
பாசம் 60
பார்திகழ 22
பாவிக்கின் 86
புகலும் 41
புறச்சமயத் 23
பேசு அரிய 43
பொற்புறு 58
மண்முதல் 64
மருவிய 53
மன்னிய 35
மாயை மா 55
மாயை முதல் 40
முந்தியஐம் 46
முந்திய ஒருமை 59
மூவகை 34
மேலைக்கு 37
மோகம் மிக 35
வந்த அடைந்து 42
வளம் நிலவு 21
விரும்பிய 24
விளம்பிய 60

உ

திருச்சிற்றம்பலம்

தோத்திரமும் சாத்திரமும் ஆனான் கண்டாய்!

மெய்கண்ட நூல் ஆர்வலர்கள் சீவன் முத்தானாக்கும் சிவப்பிரகாசத்துள்ளே மனப்பாடம் செயதகும். பாடல்கள் எண்கள் வருமாறு :

1, 5, 7, 13 - 15, 18 - 20, 25, 28, 29, 31 - 34, 36, 39, 43, 45 - 51, 53, 55, 57, 60, 63 - 64, 67 - 73, 75, 78, 80 - 90, 92, 93, 95 - 99

மாணிக்கவாசகர் துதி !

போற்றியோம் மாணிக்கவாசக! நும் புகழ் சரிதம்!!
போற்றியோம் மாணிக்கவாசக! நும் பொருள் நூல்கள்!!
போற்றியோம் மாணிக்கவாசக! நும் பூங்கழல்கள்!!
போற்றியோம் மாணிக்கவாசக! நும் பெருந்துறையே!!

- அருள்விளக்கம் அண்ணாமலை அடிகள்

ஒலிதரு கயிலை உயர் கிழவோன்

திருக்கோலக் காட்சி!

காவாய் கனகத் திரளே போற்றி! கயிலை மலையானே போற்றி! போற்றி!!

இந்நூல் கிடைக்குமிடம் :

அடக்கவிலைப் பதிப்பு : ரூபாய் எட்டு

இரா.கி. சச்சிதானந்தம், *அமைப்புச் செயலர்*

அருள்தரும் மாணிக்க வாசகர் மன்றம்

இராமாபுரம், வழி காவேரிப்பாக்கம், வேலூர் மாவட்டம் - 632 508

அச்சிட்டோர் கைலாஷ் பிரிண்டர்ஸ், 32, பங்காரு தெரு,
அண்ணாசாலை, சென்னை - 32. போன் : 28419506.